


ஸ்ரீ ஹரி :

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

### தெய்வீக மாதப் பத்திரிகை




ஹிரண்யகசிபு : ப்ரஹ்லாதா! ஆயுஷ்மன்! நீ உன்னுடைய குருவினிடம் கற்றதில் எதை ஸாரம் என்று நினைக்கின்றாயோ அதில் கொஞ்சம் எடுத்துக் கூறுவாயாக!


வேணு : 6 | ஜூலை 2001 | கானம் : 12

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India Regd. No. TN/CPMG/156/2001
R. No. 62828/95 Licensed to Post without prepayment WPP No. 52

வேணு : 6 | ஜூலை 2001 | கானம் : 12


SRI HARI :

## OUR MISSION PUBLICATIONS

| | | Cassette | CD |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனங்கள் 2 Volumes | | Rs.80/- | Rs. 100/- |
| 2. அக்ஷரமணமாலை | Part - I | Rs. 400/- | Rs. 600/- |
| | Part - II | Rs. 400/- | Rs. 600/- |
| | Part - III | Rs. 280/- | |
| | MP3 CD | | Rs. 150/- |
| 3. உபதேச உந்தியார் | | Rs. 240/- | |
| 4. திருப்பாவை | | Rs. 560/- | |
| 5. ''ஹரே ராம'' நாம கீர்த்தனம் | | Rs. 40/- | Rs. 50/- |
| 6. ஸ்ரீ ஸ்வாமிகளின் பொன்மொழிகள் | | பாகம் 1 | Rs. 5/- |
| 7. ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளுரைகள் | | பாகம் 1 | Rs. 20/- |
| 8. மதுரமுரளி | | | |

| | | |
|---|---|---|
| July '95 - Aug '96, | Sept '96 - June '97 | Rs. 120/- |
| July '97 - June '98, | July '98 - June '99 | each |
| July '99 - June 2000, | July 2000 - June 2001 | Volume |


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083. ✆ : 4895875 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar

ஸ்ரீ ஹரி:

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 6 ஜுலை 2001 கானம் : 12

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 68 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 4 |
| 4. | வேதகதைகள் - 49 | 5 |
| 5. | ஜபயோகத்தின் பெருமை | 8 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு - 39 | 11 |
| 7. | ஸனாதன புதிர் - பகுதி - 3 | 15 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 43 | 17 |
| 9. | ஊழ் | 19 |
| 10. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 2 (தொடர்ச்சி) | 22 |
| 11. | மாணவர்களுடன் சில வார்த்தைகள் | 26 |
| 12. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 70 | 28 |
| 13. | மஹாபாரத கதைகள் - நளோபாக்யானம் - தொடர்ச்சி | 30 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் - பூபாளம் தாளம் - ஆதி

*பீதாம்பரதர ப்ருந்தாவனப்ரிய*
*பக்தவத்ஸல ஸுப்ரஸன்னோபவ*
*ப்ரஹ்மாதிபூஜித ப்ருகுமுனி ரக்ஷக*
*பார்கவீநாயக ஸுப்ரஸன்னோபவ*

*ஜானகீரமண ஜலஜவிலோசன*
*ஜகத்ரக்ஷக ஸுப்ரன்னோபவ*
*ஜிதகரதூஷண வரம்ருதுபாஷண*
*கோதண்டபாணே ஸுப்ரஸன்னோபவ*

*துளஸீவனப்ரிய த்ரௌபதீரக்ஷக*
*த்ருவராஜஸேவித ஸுப்ரஸன்னோபவ*
*ததிக்ருதசோர தருவனமால*
*தீனவத்ஸல ஸுப்ரஸன்னோபவ*

*யசோதபால யதுகுலதிலக*
*யமுனாலோல ஸுப்ரஸன்னோபவ*
*யக்ஷஶாபஹர தேவாதிபூஜித*
*பரிக்ஷித்ரக்ஷக ஸுப்ரன்னோபவ*

*பாகவதப்ரிய பவது:கஹரண*
*பன்னகஶயன ஸுப்ரஸன்னோபவ*
*பாலக முரளீதரப்ரியதேவ*
*ப்ரேமிகவரத ஸுப்ரஸன்னோபவ*

---

*நாமாவளி*

*ஸுப்ரஸன்னோபவ ப்ரேமிகவரத*
*மாதுரிஸகிரமண ஸுப்ரஸன்னோபவ*

இந்த வருடம், ஸ்ரீ மஹாபெரியவாளின் நூற்றியெட்டாவது ஜயந்தி மஹோத்ஸவம் நமது மதுரபுரி ஆஶ்ரமத்தில் நடைபெற்றது. நம்முடைய மிஷனின் ஸார்பில், வருடா வருடம் ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண ஸதஸ் நடத்தி வரப்படுகின்றது அல்லவா! அது இந்த வருடம் நம்முடைய பாடசாலை அத்யாபகர் ஸ்ரீ மல்லிகார்ஜுன ஶர்மா அவர்களுடைய க்ருஹத்தில் நடைபெற்றது. ஸ்ரீ மஹாபெரியவாளின் ஜயந்தி அன்று, ஸதஸ் பூர்த்தியாகி, கலந்து கொண்ட வித்வான்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

மதுரபுரி ஆஶ்மரத்தில், ஸ்ரீ மஹாபெரியவாளின் பாதுகைகளுக்கு விசேஷமாக திருமஞ்சனமும், பூஜையும் செய்யப்பட்டன. கணபதி ஹோமம், ஆவஹந்தி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், ஸுதர்ஸன ஹோமம், ஜயாதி ஹோமம் போன்ற ஹோமங்கள் நடைபெற்றன. மாலையில், தர்மபுரம் ஸ்வாமிநாதன் அவர்களின் தேவார இன்னிசை நடைபெற்றது. ஸ்ரீ ஐயப்பன் மற்றும் ஸ்ரீ இமயவன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

மாலையில், ஸ்ரீ மஹாபெரியவாளின் பாதுகைகள் வெள்ளிரதத்தில் பவனி வந்தன. பின்பு பம்மல் ஸ்ரீ ஏகாம்ர ஐயர் ஸ்ரீ மஹாபெரியவாளின் வாழ்க்கையில் இருந்து பல ஸம்பவங்களை உருக்கமாக எடுத்துக் கூறி ப்ரவசனம் செய்தார்கள். அன்று இரவு திவ்யநாம ஸங்கீர்த்தனமும் நடைபெற்றது. இப்படியாக இந்த வருடம் ஸ்ரீ மஹாபெரியவாளின் ஜயந்தி மஹோத்ஸவத்தை நம் ஸ்வாமிகள் மதுரபுரியில் கொண்டாடினார்கள். மேலும், ஸ்ரீ ஏகாம்ர ஐயர் சொல்லும்பொழுது, ''உலகத்தில் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்த நளன், தர்மபுத்ரர், ஸீதாதேவி, க்ருஷ்ண பரமாத்மா இவர்களை அதிகாலை எழுந்தவுடன் ஸ்மரிக்கவேண்டும் என்பர். மனித ஸமுதாயத்திற்காக தன்னுடைய வாழ்க்கையையே தியாகம் செய்து எண்ணற்ற துன்பங்களை அனுபவித்த ஸ்ரீ மஹாபெரியவாளையும் நாம், காலையில் இந்த நால்வருடன் சேர்த்து ஸ்மரிக்கவேண்டும்'' என்று உருக்கத்துடன் கூறினார்கள்.

**– ஜயந்தி ஜானகிராமன்**

(தொடரும்)

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : பூஜா காலங்களில் கோவில்களில், வாத்யம், மணி, ஶங்கம் போன்ற பல ஶப்தங்களை ஏற்படுத்துவது நமக்கு ஒரு பரவசத்தை ஏற்படுத்துவதற்காகவா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஸாதாரணமாக, பகவான் ஒலி, ஒளி ரூபமாக இருப்பதால், நாம் அவருக்கு பலவிதமான ஒலிகளை எழுப்பி ஒளிமயமான கற்பூரத்தை காண்பிக்கின்றோம் என்று கூறுவார்கள். ஆகம ஶாஸ்த்ரத்தின்படி இதற்கு சில விளக்கங்கள் இருக்கலாம். ஆனால், இதற்கு **பா**வ பூர்வமான ஒரு விளக்கம் சொல்கின்றேன். மஹான்கள், சில ஸமயங்களில் லோக ப்ரஜ்ஞை இன்றி ஸமாதியில் ஆழ்ந்துவிடுவது உண்டு. அந்த மஹான்களுக்கு லோக ப்ரஜ்ஞை ஏற்படுத்துவதற்காக, ஶங்கநாதம், ஓங்கார ஶப்தம் போன்ற பலவற்றை எழுப்புவார்கள். அத்தகைய மஹான்களுக்கு அந்த ஶப்தங்களினால் லோக ப்ரஜ்ஞை வருவதுண்டு. பகவானும், ஒவ்வொரு கோயிலிலும் அர்ச்சாவதாரத்தில் ஸமாதியில் இருக்கின்றான். இதை அர்ச்சாவதார ஸமாதி என்பர். நாம் பகவானுக்கு பலவிதமான உபசாரங்களும், நிவேதனமும் ஸமர்ப்பிக்கும்பொழுது, அந்த அர்ச்சா ஸமாதியை சிறிது களைந்து பகவான் நாம் செய்யும் உபசாரங்களை ஏற்றுக்கொள்வதற்காகவே இத்தகைய ஶப்தங்கள் ஏற்படுத்துகின்றோம்.

*கேள்வி : ஒருவர் ஸன்யாஸம் பெற்றுக்கொண்டு உண்மையான ஸன்யாஸ தர்மங்களை கடைப்பிடித்து வருகின்றார். அவருடைய ஆயுட்காலத்திற்குள் அவருக்கு ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படாவிடில் அவரின் கதி என்ன?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஶாஸ்த்ரோத்தமமான ஸன்யாஸம் பெற்றுக்கொண்டு அந்த ஆஸ்ரம தர்மங்களை விதி வழுவாமல் கடைப்பிடித்து வருவதாலேயே அவருக்கு உயர்ந்த தபோலோகம் ஸித்திக்கும். மீண்டும் அவர்கள் பூவுலகத்திற்கு வரமாட்டார்கள். அந்த தபோலோகத்திலேயே தபஸ் செய்து லக்ஷியத்தை அடைந்து விடுவார்கள்.

(தொடர்ச்சி : முன் அட்டை உட்பக்கம்)

# வேத கதைகள் - 49

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## ஓட்டப்பந்தயம்

முன்பு ஒரு ஸமயம், தேவர்கள் ஸோமயாகம் செய்தனர். ஸோமலதை என்பது ஒருவிதமான கொடி. அதை நசுக்கி, சாறு பிழிந்து இந்த ஸோம ரஸத்தை அக்னியில் ஹோமம் செய்து மீதியை ப்ரஸாதமாக சாப்பிடவேண்டும். இதற்குதான் ஸோமபானம் என்று பெயர். இந்த ஸோமலதையை வைத்து யாகம் செய்வதால்தான் ஸோமயாகம் என்று பெயர் ஏற்பட்டது. இவ்விதம் யாகத்தில் ஸோமபானம் செய்யும்போழுது நான்தான் முதல் பாகத்தை பானம் செய்வேன் என்று தேவர்களுக்குள் போட்டி ஏற்பட்டது.

ஒவ்வொருவரும் தான்தான் முதலில் பானம் செய்யவேண்டும் என்று விரும்பினர். அப்பொழுது அவர்களுக்குள் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டனர். ''ஒரு மரத்தையோ, அல்லது ஒரு பாறையையோ குறி வைத்து ஓடுவோம். இந்த ஓட்டப்பந்தயத்தில் எவன் வெற்றி அடைகிறானோ அவன் முதலாவதாக ஸோமபானம் செய்யட்டும்'' என்று தீர்மானித்தனர். அப்பொழுது அந்த தேவர்கள் அவ்விதம் ஒப்புக்கொண்டு ஓட ஆரம்பித்தனர். அவ்விதம் அவர்கள் ஓடும்பொழுது வாயுவானவர் இலக்கை நோக்கி முன்பாக ஓடினார். வாயுவிற்கு பின்பாக இந்திரன், இந்திரனுக்கு பின்பாக மித்ரா வருணர்கள், அவர்களுக்கு பின்பாக அஸ்வினி தேவர்கள் இவ்விதம் முறையாக யாவரும் ஓடினர்.

இவ்விதம் ஓடும்பொழுது, இந்த வாயு நிச்சயம் வெற்றி அடைவான் என்று இந்திரன் மனதில் நினைத்தான். இவ்விதம் அறிந்து அந்த வாயுவிற்கு பின்பு கூடவே ஓடி வந்தான். வாயுவே நான் உன்னோடு வருகிறேன். எனக்கும், உன்னோடு வெற்றி கிடைக்கட்டும். நாம் இருவரும் முதலில் ஸோமபானம் குடிப்போம். உனக்கு பாதி, எனக்கு பாதி என்று இந்திரன் கூறினான். இந்திரன்

வெற்றி அடையக்கூடாது என்று வாயு தீர்மானித்து, ''நான்தான் வெற்றியடைவேன். என்னை தொடர்ந்ததற்காக உன் வெற்றியை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்'', என்றார்.

அப்பொழுது இந்திரன், ஸோமபானத்தில் மூன்றில் இரண்டு பாகம் உனக்கு இருக்கட்டும், எனக்கு ஒரு பாகம் போதும். இதைப் பெற்றுக்கொண்டு என் வெற்றிக்கு நீ உதவி புரியவேண்டும் என்று இந்திரன் வேண்டினான். இதையும் வாயு ஒப்புக்கொள்ளவில்லை. பிறகு இந்திரன், ''நான்கில் ஒரு பாகம் எனக்கு போதும். மூன்று பாகத்தை நீ எடுத்துக் கொள்'' என்று வாயுவிடம் வேண்டினான். ஸோம ரஸத்தில் பங்கு குறைந்தாலும் முதலில், தான் குடிக்க வேண்டும் என்பது இந்திரன் அவா. வாயுவும் இதற்கு ஒப்புக் கொண்டார். அதனால் இந்திரன், வாயு இருவரும் வேகமாக ஓடி இலக்கைத் தொட்டு வெற்றி பெற்றனர். இவர்களுக்கு அடுத்ததாக மித்ரா வருணர்கள், பின்பு அஸ்வினி தேவர்கள் இலக்கைத் தொட்டனர்.

வெற்றியைப் பின்பற்றி இந்திரன், வாயு இவர்கள் முன்பாக ஸோமபானம் அருந்தினர். பிறகு மித்ரா வருணர்கள், பிறகு அஸ்வினி தேவர்கள், இவ்விதம் நான்கு பாகமாக ஆனதை திவ்ய த்ருஷ்டியினால் ஒரு ரிஷியானவர் அறிந்து ஒரு மந்திரத்தைக் கண்டு பிடித்தார். இந்த மந்திரத்தின் பெருமையால் இந்திரனை ஸாரதியாக வாயு பெற்றான். இந்த காரணத்தினால், போர் புரிபவர்கள் தேரோட்டிகளுக்கு நல்ல சம்பளம் கொடுக்கின்றனர். அதாவது, தலைவருக்கு கொடுக்கும் சம்பளத்தில், நான்கில் ஒரு பாகம்தான் தேரோட்டிகளுக்கு அளிக்கின்றனர். தேரோட்டிகளும் அந்த சம்பளத்தை தங்களுக்கு தகுந்தது என்று எண்ணுகின்றனர். எந்த காரணத்தால் இந்திரன் வாயுவிற்கு ஸாரதியாக ஆகி நான்கில் ஒரு பாகம் பெற்றானோ, அந்த காரணத்தால் போரில் ஈடுபடும் ஸாரதிகளுக்கும் நான்கில் ஒரு பாகம் அளிப்பது பொருத்தமாகும்.

இதுபோல் வாஜபேய யாகத்திலும், வாஜபேய யாகத்தை தேவர்கள் யாவரும் சேர்ந்து ஒரே ஸமயத்தில் கண்டுபிடித்தார்கள். ஆதலால், யார் முதலில் யாகம் செய்வது என்ற போராட்டம் அங்கும் ஏற்பட்டது. அங்கும் ஓட்டப்பந்தயத்தில் யார் வெற்றி பெறுகிறார்களோ

அவர்கள் யாகத்தை முதலில் செய்யலாம் என்று உடன்படிக்கை ஏற்பட்டு தேவர்கள் ஓடினார்கள். ப்ருஹஸ்பதி அதில் வெற்றி பெற்றார். அவர் முதலில் வாஜபேயயாகம் செய்தார். இங்கு வாயுவை பின்பற்றியது போல் இந்திரன் குருவை பின்பற்றி வெற்றிபெற்று, தான் யாகத்தை முதலில் செய்தான். இந்த கதை முன்பே வரப்பெற்றிருக்கிறது.

இந்த வேத வரலாறுகளைக் கவனிக்கும்பொழுது போட்டி பந்தயங்கள் வேத காலத்திலேயே ஏற்பட்டுள்ளது என்று நமக்கு தெரிய வருகிறது. இந்திரன் பிறரை அனுஸரித்து தன் காரியத்தை ஸாதிக்கிறான் என்றும் நமக்கு நன்கு புலனாகிறது. இதில் ஒரு உண்மையும் நமக்குத் தெரிகிறது. நமக்கு வெற்றி வேண்டுமானால் வேண்டியவர்களை வேண்டியே ஆக வேண்டும் என்பதாகும். இதில் இந்திரன் திறமைமிக்கவன்.

இன்று பலவித விளையாட்டுப் பந்தயங்கள் அடிக்கடி நடக்கின்றன. எல்லாவற்றிற்கும் வேதம்தான் அடிப்படை. (பூதம், பவ்யம், பவிஷ்யச்ச ஸர்வம் வேதாத் ப்ரஸித்யதி) நடந்தது, நடப்பது, நடக்கப்போகிறது எல்லாம் வேதத்தினால்தான் ஸித்திக்கிறது என்று வேதத்தின் பெருமை நமக்கு நன்கு தெரிகிறது.

---

## அனுபந்தம்

சென்ற இதழில், ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனத்தில் (ப்ராத ஸ்மராமி பாகவதான்) விட்டுப்போயிருந்த இரண்டாவது சரணம் கீழே ப்ரசுரிக்கப்பட்டுள்ளது. இதையும் சேர்த்து, ''ப்ராத ஸ்மராமி பாகவதான்'' கீர்த்தனத்தை பாடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ராகம் : பூபாளம் தாளம் : ஆதி

சரணம் 2

*ஶங்க சக்ர கதாகட்க*
*கோதண்ட முரளீ மயூரபிஞ்சானி*
*வம்ஶீவட கோவர்தன பர்ஷாணா*
*முகுந்தேன லாலிதான் கோவர்கான் (ப்ராத)*

# ஜபயோகத்தின் பெருமை

**– பூஜ்யஸ்ரீ ஸ்வாமி ஶிவானந்த ஸரஸ்வதி அவர்கள், ரிஷிகேஷ்**

1. மிருத்யுதேவன் எப்பொழுது உன் ஆயுளைக் கவருவான் என்று சொல்லமுடியாது.
2. இல்வாழ்க்கை என்பது உண்பதற்கும், உறங்குவதற்கும் உனக்குக் கொடுக்கப்படவில்லை.
3. அன்பனே! ஞானக்கண்ணைத் திற. ஹரி அல்லது ராம நாமாவை ஜபம் செய்.
4. ஜபத்தைக் காட்டிலும் சிறந்த மருந்து இந்த கெட்ட கலிகாலத்தில் இல்லை.
5. ஜபம், யமதர்மராஜனையே உன்னிடம் வராதபடி தடுக்கிறது.
6. அக்னி, பஞ்சு மூட்டையை எரித்துவிடுவதுபோல், ஜபம், ஜீவர்களின் ஐந்துவிதத் துன்பங்களையும், மூன்றுவித தாபங்களையும், எளிதில் அழித்துவிடுகிறது. இவ்வாறு ஜபம் ஸகல கர்மாக்களையும் எரித்துவிடுகிறது.
7. கங்கா ஜலம் வேஷ்டியின் அழுக்கைக் களைவது போல், ஜபம் மனத்திலுள்ள அழுக்குகளையெல்லாம் நீக்கி மனதை சுத்தப்படுத்துகின்றது.
8. தேவ தர்சனத்திற்கு ஆவலாய் இருக்கும் பக்தன், தவறாமல் ப்ரஹ்ம முகூர்த்தத்தில் எழுந்திருக்கிறான்; பத்மாஸனத்தில் அமர்கிறான்; **பா**வம், ப்ரேமையுடன் ஜப மாலையை உருட்டுகிறான். சில ஸமயம், மௌன ஜபம் செய்கிறான். சில காலம் வாய்க்குள் ஜபிக்கிறான். ஆனால் பக்கத்திலிருப்பவர்கள் காதில் அது விழாது. இன்னும் சில ஸமயம் மற்றவர் காதில் விழும்படி ஜபிக்கிறான்; ஏனென்றால் அவனது (ஒருமனதாகிய) ஏகாக்ர சிந்தை சிதறுகிறது.
9. அனுஷ்டானங்களை எல்லாம் கங்கைக் கரையிலேயே செய்கிறான்.

10. பால் பழங்களையே புசிக்கிறான். சில வேளை பட்டினி விரதம் பின்பற்றுகிறான்.

11. லக்ஷக்கணக்கில் மந்திர ஜபத்தை புரஸ்சரணை செய்கிறான். இப்படி மனோ அமைதியையும், தெய்வானுபவங்களையும் பெறுகிறான். புரஸ்சரணைக்குப் பின் வேதியரையும், ஸாதுக்களையும், ஏழைகளையும் போஷிக்கிறான்.

    இவ்வாறு தேவனைப் ப்ரீதி செய்து அவன் அருளைப் பெற்று ப்ரஹ்மானந்தத்தையும், பூர்ணத்தையும் அம்ருதத்வத்தையும் அடைகிறான்.

12. ஜபத்தின் தேஜஸினால் அவன் முகம் ப்ரகாசிக்கிறது.

13. இத்தகை ஜபயோகி, சூரியனைக் காட்டிலும் ப்ரகாசமாய் விளங்குகிறான்.

14. ஜபத்தினாலேயே எல்லா ஸித்தி சக்திகளையும் அடைகிறான். ஆதிசேஷன் கூட அவனுடைய பெருமை, மஹிமைகளை எடுத்துக் கூறமுடியாது.

15. ஜபம், ஹ்ருதயத்தை சுத்தி செய்கிறது.

16. ஜபம், மனதின் சஞ்சலத்தைத் தடுக்கிறது.

17. ஜபம், ஆறுவகைப் பகைவர்களை (காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம்) விநாசம் செய்கிறது.

18. ஜபம், ஜீவனை பிறப்புத் தொல்லைகளினின்றும் காப்பாற்றுகிறது.

19. ஜபம், பாவங்களை எரித்துவிடுகிறது.

20. ஜபம், கெட்ட ஸம்ஸ்காரங்களை எரித்துவிடுகிறது.

21. ஜபம், ஆசாபாசங்களை அறவே அழிக்கிறது.

22. ஜபம், வைராக்யத்தை உண்டு பண்ணுகிறது.

23. ஜபம், எல்லாவித ஆசைகளையும் வேருடன் பிடுங்குகிறது.

24. ஜபம், ஜீவனின் எல்லாவித பயங்களையும் ஒழிக்கிறது.

25. ஜபம், ஜீவனின் மயக்கங்களை எல்லாம் அகற்றுகிறது.

26. ஜபம், சாந்தியைக்கொடுக்கிறது.

27. ஜபம், ப்ரேமையை அபிவிருத்தி செய்கிறது.

28. ஜபம், பக்தனை தேவனுடன் ஒன்ற வைத்துவிடுகிறது.

29. ஜபம், ஜீவனுக்கு ஆரோக்யம், ஐஶ்வர்யம், பலம், தீர்க்காயுஸைக்கொடுக்கிறது.

30. ஜபம், ஜீவனுக்கு தெய்வீக சித்தத்தைக்கொடுக்கிறது.

31. ஜபம், நித்யானந்தத்தைக்கொடுக்கிறது.

32. ஜபம், ஜீவனின் குண்டலினி சக்தியைக் கிளப்புகிறது.

33. ஜபம், ஜீவனுக்கு ஸுகமான ஆனந்தகரமான தெய்வீக அபிஷேகத்தைக்கொடுக்கிறது.

34. ஜபம், ஜீவனது ஸூக்ஷ்ம லிங்க ஶரீரத்தை அற்புதமாய் நீராட்டிப் பரிசுத்தமாக்குகின்றது.

35. ஜபம், மனதை சுத்தி செய்யும் ஒரு தெய்வீகமான சோப்பு.

36. ஜபம், மனதின் பல்வேறு அசுத்தங்களை நீக்குகிறது.

37. உன் மனது இஷ்ட தேவதையின் ரூபத்தில் லயிக்கமாட்டேன் என்றாலும், அல்லது குலதேவதைபால் நிற்கமாட்டேன் என்றாலும், அப்பொழுது நீ உச்சரிக்கும் மந்திர ஒலியை நீயே செவி கொடுத்துக் கேள், அல்லது மந்திரத்தின் எழுத்துக்களை வரிசைக் கிரமமாக சிந்தனை செய். இவ்வாறு செய்தால் சஞ்சலப்படும் மனம் ஒன்றுபடும்.

---

**ஸ்ரீ மஹாபெரியவாள் சொல்லி பம்மல் ஏகாம்ர ஶாஸ்திரிகள் கேட்டது**

■ நம்முடைய துணிகளை துவைத்துக்கொடுக்கும் வண்ணானுடைய கைகளில் இருந்து நேராக வஸ்த்ரங்களைப் பெற்றுக் கொண்டால் அது மடிவஸ்திரமே ஆகும். அதைக் கீழே வைக்கச் சொல்லி எடுத்துக்கொண்டால் அது மடி வஸ்த்ரம் ஆகாது.


# எந்தரோ மஹானுபாவுலு - 39

இனி புண்டரீகவித்யாநிதி என்ற மற்றுமோர் பக்தரத்னம் சைதன்ய மஹாப்ரபுவின் கோஷ்டியில் வந்து சேர்ந்த விதத்தைப் பார்ப்போம். புண்டரீகவித்யாநிதி ஒரு விசேஷமான பக்தர். அவரது ஆசார வ்யவஹாரங்களைப் பார்த்தால் யாரும் அவரை பக்தர் என்று நினைக்காமல் விஷய ஆசை உள்ளவர் என்றுதான் நினைப்பார்கள். அவர் பெரிய தனிகர். மிகவும் ஸுந்தரபுருஷர் வேறு. தனது சுருள்சுருளான கேசத்தை வாசனைத் தைலங்கள் பூசி நேர்த்தியாக வைத்திருப்பார். பட்டு வஸ்திரங்கள் அணிந்துகொள்வார். ஆனால், ஹ்ருதயத்தில் எப்பொழுதும் ரஹஸ்யமாக ஹரிபக்தி செய்து வந்தார்.

அவர் கங்கையில் ஸ்னானம் செய்யவேமாட்டார். அவரது மனோ**பா**வம் என்னவென்றால், கங்கையில் ஸ்னானம் செய்தால் கங்காமாதாவின் மீது தனது பாதம் பட்டுவிடுமே என்பதாகும். கங்கையில் யாராவது மலமூத்திர விஸர்ஜனம் செய்தாலோ, குப்பைக்கூளங்களை எறிந்தாலோ, அவரது உள்ளத்தில் இனம் தெரியாத வேதனை உண்டாகும். ஆனால், அவரை ஜனங்கள் கங்கையில் ஸ்னானம் செய்யாத பாபி என்று நினைப்பார்கள். அவரது அந்தரங்கம் ஒருவருக்கும் புரியாது. ப்ரகடனம் செய்யாமல் ரஹஸ்யமாக தனது பக்தியை வைத்திருந்தார்.

ப்ரபு, ஒருமுறை நாமஸங்கீர்த்தனத்தின்போது, ''ஹா புண்டரீக வித்யாநிதி! ஓ எனது தந்தையே! வித்யாநிதி!'' என்று கூவி கதறி அழலானார். பிறகு மூர்ச்சையாகி தரையில் விழுந்தார். பக்தர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. புண்டரீகன் என்று ஸ்ரீ க்ருஷ்ணனைத்தான் அழைத்தாரோ என்று நினைத்தார்கள். ஆனால் வித்யாநிதி என்று அழைத்தாரே! அது யாராவது பக்தராக இருக்கலாமோ என்று ஐயமுற்றார்கள். எவ்வளவு யோசித்தும் நவத்வீபத்தில் புண்டரீக வித்யாநிதி என்று ஒரு பக்தர் யாரும் இருப்பதாக அவர்களுக்குத் தெரியவில்லை. ப்ரபுவிற்கு மூர்ச்சை தெளிந்ததும், ''நீங்கள் புண்டரீக வித்யாநிதி என உரக்க அழைத்தீர்களே! அப்படிப்பட்ட பரமபாகவத பாக்யவான் யார்?'' என பக்தர்கள் கேட்டார்கள்.

அதற்கு ப்ரபு, ''அவர் ஒரு பரம வைஷ்ணவர். நீங்கள் அவரைப் பார்த்தால் அவரது மேன்மையைப் புரிந்து கொள்ள முடியாது. அவர் 'சட்காவ்' என்ற கிராமத்தில் வசிக்கும் உயர்ந்த ப்ராஹ்மண பக்தர். அவர் சாந்திபூரில் இருக்கும் தனது மற்றொரு க்ருஹத்திற்கும் கங்காபூஜைக்காக அடிக்கடி வருவார். அவரது தர்சனத்திற்காக நான் ஏங்குகிறேன் என்றார். இதைக் கேட்டதும் அனைவரும் புண்டரீகவித்யாநிதி, மஹாப்ரபுவைத் தேடிவரும் ஸமயத்தை ஆவலுடன் எதிர்பார்க்கலானார்கள்.



ஒருநாள் புண்டரீகவித்யாநிதி நவத்வீபத்துக்கு வந்தார். ஒருவராலும் அவரை பரம வைஷ்ணவன் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. யாரோ பணக்கார கௌரவமான மனிதர் என்றே நினைத்தார்கள். ப்ரபுவின் அந்தரங்க பக்தர்களுள் ஒருவரான முகுந்ததத் இனிமையான குரலில் பாடும் திறமை உள்ளவர். இவரும் வித்யாநிதியின் ஊரைச் சேர்ந்தவர். இருவரும் சம வயதினர். மிகவும் பரிச்சயமுள்ளவர்கள். முகுந்ததத், ப்ரபுவின் மற்றொரு பக்தரான கதாதரரிடம் மிகுந்த அன்புகொண்டவர். அவரிடம் முகுந்ததத், ''தற்சமயம் நவத்வீபத்திற்கு ஒரு வைஷ்ணவர் வந்துள்ளார். நாமிருவரும் அவரைச் சந்தித்து வருவோம்'' எனக் கூறி புண்டரீக வித்யாநிதியின் இருப்பிடத்திற்கு கதாதரருடன் சென்றார்.

நவத்வீபத்தில் மிகுந்த அழகுள்ள பவனத்தில் வித்யாநிதி தங்கியிருந்தார். அவர் அமர்ந்திருந்த கட்டில் மிகவும் நேர்த்தியான வேலைப்பாடுகள் உள்ளதாக இருந்தது. அதன் மேல் உயர்ந்த வகை மெத்தைகளும் விரிப்புகளும் இருந்தன. வித்யாநிதி தனது நெற்றியில் சுகந்தமான திலகமிட்டுக்கொண்டிருந்தார். சொகுசாக கட்டிலில் வாசனையுள்ள தாம்பூலத்தை மென்று சிவந்த அதரங்களுடன் ஒரு இளவரசனைப் போல் அமர்ந்துகொண்டிருந்தார். இரு வேலைக்காரர்கள் அவருக்கு மயில்பீலியிலான கோமளமான விசிறியால் வீசிக்கொண்டிருந்தனர். கதாதரரை முகுந்ததத் வித்யாநிதிக்கு அறிமுகம் செய்து வைத்தார். கதாதரர் பரம விரக்த வைஷ்ணவர் என்றும் மஹாப்ரபுவின் க்ருபைக்கு பாத்திரமான அந்தரங்க பக்தர் என்றும் முகுந்ததத் கூறினார்.

வித்யாநிதி சிரித்துக்கொண்டே, தங்களது தர்சனத்தால் பாக்யமடைந்தேன் என்றார். கதாதரருக்கோ வித்யாநிதியைப் போல் ஆடம்பரத்தில் திளைத்திருக்கும் ஒருவர் எப்படி பகவத் பக்தராக இருக்க முடியும் என பெரிய ஆச்சரியமாகவும் ஸந்தேகமாகவும் இருந்தது. முகுந்ததத்திற்கு கதாதரரின் மனோபாவம் புரிந்துவிட்டது. எனவே, அவர் ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து ஸ்ரீக்ருஷ்ணனின் க்ருபையை விவரிக்கும் இரு ஸ்லோகங்களைத் தன் மதுரமான குரலில் பாட ஆரம்பித்தார். ஸம்பூர்ண பாகவதத்திலேயே ரத்னமாக கருதப்படும் அந்த ஸ்லோகங்களைக் கேட்டதுமே வித்யாநிதி மூர்ச்சையாகி கட்டிலிலிருந்து கீழே விழுந்தார்.

ஒரு க்ஷணத்துக்கு முன் சிரித்துக்கொண்டு ஒய்யாரமாக இருந்த வித்யாநிதி, அடுத்த க்ஷணத்தில் ஶ்லோகத்தைக் கேட்டு அடைந்த விசித்திர தசையைப் பார்த்து கதாதரர் ஆச்சர்யத்தில் ஆழ்ந்தார். ஸ்வேதம், கம்பம், அச்ரு போன்ற ஸாத்வீக **பா**வங்கள் வித்யாநிதியின் சரீரத்தில் ஏற்பட்டன. பெருங்குரலில் வித்யாநிதி அழ ஆரம்பித்தார். கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது. தனது பட்டு வஸ்த்ரங்களை இரு கைகளால் கிழித்துக்கொண்டே ''அண்ணா பாடுங்கள், பாடுங்கள்! தங்கள் இனிய குரலால் எனது இரு செவிகளிலும் அம்ருதத்தை நிரப்புங்கள்'' என்று கெஞ்சினார். முகுந்ததத் இடைவிடாமல் பாடிக்கொண்டிருந்தார். வித்யாநிதியின்

நிலைமையைக் கண்டு, அவருடன் கூட இருந்தவர்கள் முகுந்ததத்தை பாடுவதை நிறுத்திக்கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார்கள். அதற்குள் வித்யாநிதி மயக்கமடைந்து கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தார்.

கதாதரருக்கு இவரைப் போய் நாம் விஷயீ என நினைத்தோமே! இப்பேர்ப்பட்ட பாகவத உத்தமரைப் புரிந்து கொள்ளாமல் தவறாக நினைத்தோமே என்று தோன்றலாயிற்று. மனதிலேயே தனது தவறை நினைத்து வருந்தலானார். பகவத் அபசாரத்தைவிட பாகவத அபசாரம் மன்னிக்க முடியாததாயிற்றே என்று நினைத்து இவரையே தனக்கு மந்த்ரதீக்ஷை அளிக்குமாறு வேண்டி, மந்த்ரதீக்ஷை பெற்றுக்கொண்டால் எனக்கு குருவாகி என்னை மன்னித்துவிடுவார் என நினைத்து தனது எண்ணத்தை முகுந்ததத்திடம் தெரிவித்தார். அவரது சுத்தமான மனதைப் புரிந்து கொண்ட முகுந்ததத் வித்யாநிதியிடம், ''கதாதரர் மிகுந்த நல்ல குலத்தைச் சேர்ந்தவர். ஸத்பாத்ரமான உயர்ந்த வைஷ்ணவர். அவர் தங்களிடம் மந்த்ரதீக்ஷை பெற விரும்புகிறார்'' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

முகந்ததத் ப்ரார்த்தனையை ஏற்றுக்கொண்டு, வித்யாநிதி கதாதரருக்கு மந்திர உபதேசம் செய்ய ஸம்மதிப்பாரா? அல்லது அத்தகைய தகுதி தனக்கு இல்லை என இன்று கூறி விடுவரா என்று முகுந்தத் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

ஏதோ ஒரு விதத்தில் ஊனமுற்றவர்களையும், குருடர்களையும் பார்க்கும்பொழுதெல்லாம் என்னுடைய மனதில் இனம் புரியாத ஒரு குற்ற உணர்ச்சி தோன்றுகிறது. உடனே, பகவானுடைய ஸந்நிதானத்துக்கு ஓடிச் செல்கின்றேன். அங்கபூர்ணமாக என்னைப் படைத்தும் உன்னிடம் பக்தி செய்யாமல், உனக்கு தொண்டு செய்யாமல் இப்படி வீணாக உலக வாழ்க்கையில் உழன்று வாழ்கின்றேனே என்று வருத்தம் ஏற்படுகின்றது. இப்படியாக, நாம் மனம் போனபோக்கில் வாழ்ந்தால் அடுத்த ஜன்மத்தில் நாம் அவர்களைபோல் ஊனமுற்றவர்களாக பிறக்க நேரிடலாம் என்று தோன்றுகின்றது.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்.**

# ஸனாதன புதிர் - 3

தொகுத்தவர் - **''ஆத்ரேயன்''**

1. புலஸ்தியர் மகன் பெயர் என்ன? அவன் தேர்ச்சி பெற்ற இசைக்கருவியின் பெயர் என்ன? யுத்த களத்தில் தனது கொடியில் எதைச் சின்னமாக வைத்திருந்தான்?
2. குபேரனுக்காக விஶ்வகர்மா நிர்மாணித்த நகரத்தின் பெயர் என்ன?
3. காளிதாசன் முருகப்பெருமானைப் பற்றி எழுதிய நூல் எது?
4. ஸ்ரீக்ருஷ்ண சைதன்யர் பிறந்த இடத்தின் பெயர் என்ன? அது எங்கு இருக்கிறது?
5. எல்லாவற்றிற்கும் ஸாக்ஷிபூதமாக விளங்கும் ஒரு தேவதை தான் பிறந்தவுடன் தனது பெற்றோர்களை விழுங்கிவிட்டது. அந்த தேவதையின் பெயர் என்ன?
6. அலகாநந்தாவும், பாகீரதியும் எந்த இடத்தில் கலக்கிறது. இரு நதிகளும் ஸங்கமம் ஆனபிறகு நதியின் பெயர் என்ன?
7. ப்ரஹ்மஸூத்திரத்தில் மொத்தம் எத்தனை ஸூத்திரங்கள் உள்ளன?
8. ஏழு சிரஞ்சீவிகள் யார் யார்?
9. சிவனால் சிரஞ்சீவி ஆக்கப்பட்டவர் யார்?
10. ஹுக்ளி நதி எந்த இரண்டு நதிகளின் சேர்க்கையால் எங்கு தோன்றுகிறது. அந்த இடத்தின் விசேஷம் என்ன?
11. சகுனியின் தாயக்கட்டைகள் எதனால் செய்யப்பட்டது?
12. மேருமலையின் சிகரத்தை வாயுபகவான் தனது பலத்தால் உடைத்து எறிந்தபோது உண்டானது என்ன?
13. பசுக்கள் மிகுந்ததும், இடையர்கள் நிறைந்ததுமான அழகிய கடற்கரை பிரதேசம் எது?
14. லோகங்கள் ஸ்ருஷ்டிக்கப்பட்டு வாழ்க்கை தோன்றிய பிறகு முதன்முதலில் இறந்தது யார்?
15. முதன் முதலாக செய்யப்பட்ட ஸம்ஸ்க்ருத இலக்கண நூலின் பெயர் என்ன? அதை எழுதியது யார்?

ஸனாதன புதிர் பகுதி - 3க்கான பதில்களை
ஜூலை 25-ந் தேதிக்குள் அனுப்பவேண்டும்.

## ஸனாதன புதிர்-2க்கான விடைகள்

1. பகதத்தன், ஸுப்ரதீகம், அர்ஜுனன்
2. கிந்தூரம்
3. சுபத்ரா, அர்ஜுனன், உத்தரை, பரிக்ஷித்
4. காண்டீவம்
5. வ்யாஸர், பராசரர், ஶுகர்
6. த்ரௌபதி
7. பஞ்ச பாண்டவர்கள், க்ருஷ்ணன், ஸாத்யகி, க்ருதவர்மா, க்ருபாசார்யர், அஶ்வத்தாமா
8. துர்யோதனன், ஜயத்ரதன்
9. அர்ஜுனன், பல்குனன், பார்த்தன், கிரீடி, ஸ்வேதவாகனன் பிபத்ஸு, விஜயன், ஜிஷ்ணு, ஸவ்யஸாசீ, தனஞ்ஜயன்
10. மாண்டவ்ய மஹரிஷி
11. மேகநாதன்
12. ஸுக்ஷணன்
13. அஞ்சனா, புஞ்ஜிகஸ்தலா

ஸனாதன புதிர் - பகுதி - 2க்கான வினாக்களுக்கு
சரியான பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்.

**முதல் பரிசு ரூ. 250/-**
(மூவருக்கு தலா ரூ. 85/- வீதம் பரிசளிக்கப்படுகிறது)

1. Sri. V. சியாமசுந்தர், 24, அக்ரஹாரம், (ஸந்நிதி தெரு) பரனூர், P.O. (வழி) முகையூர் - 605 755
2. Smt. Mythili Sundaresan, 108-D, Railway Quarters, Poonamallee High Road, Egmore, Chennai - 600 008.
3. Sri. N.S. Parthasarathy Bhattachariar, 90, T.P. Koil Street, Chennai - 5.

**இரண்டாம் பரிசு ரூ. 150/-**
(மூவருக்கு தலா ரூ. 50/- வீதம் பரிசளிக்கப்படுகிறது)

1. M.S. Jayaraman, 2, 4th Street, Brindavan Nagar, Chennai - 87.
2. Sri K.R. Venkataraman, 23/85, Bhaveshwardham, R.A.K. Road, Wadala, Mumbai - 31.
3. திரு. வ. திருநாராயணன், F1, சந்தோஷ் அபார்ட்மெண்ட்ஸ், 61, V.R. நகர் விரிவு, அண்ணாநகர் மேற்கு, சென்னை - 600 101.

**மூன்றாம் பரிசு ரூ. 100/-**
(மூவருக்கு தலா ரூ. 35/- வீதம் பரிசளிக்கப்படுகிறது)

1. Sri S. Saranathan, No.21, Ranganathan Street, Nehru Nagar, Chrompet, Chennai - 44.
2. நா. நளினா, நெ.8, செல்வராஜ் தெரு, கணபதிபுரம், குரோம்பேட்டை, சென்னை - 44.
3. Sri N. Sivasubramanian, S/o. Sri. V. Narasimhan, No. 3/20, Poochankottai Street, Salem - 636 001.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 43

விராட தேசத்தில் அமரேந்திரன் என்ற ஒரு அரசன் அரசாட்சி செய்து வந்தான். அவனுடைய தேசம் எல்லாவிதத்திலும் செழிப்புற்று விளங்கியது. அவனுடைய தேசத்தில் உள்ள மக்கள் எல்லாரும் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். அரசனுடைய உறவினர்கள் அனைவரும், அரசனுக்கு பலவிதமான உதவிகளை செய்தும் அவனிடமிருந்து பலவிதமான உதவிகளையும் பெற்றும் வந்தனர். அந்த மஹாராஜாவிற்கு ஜோதிட ஶாஸ்த்ரத்தில் மிகவும் நம்பிக்கை அதிகம். அடிக்கடி தன்னுடைய ஸபைக்கு ஜோதிடர்களை அழைத்து கௌரவிப்பான்.

ஒரு ஸமயம், இப்படியாக அவனுடைய அரச ஸபைக்கு வந்த ஒரு ஜோதிடரிடம் தன்னுடைய ஜாதகத்தை காண்பித்து பலாபலன்களைக் கூறுமாறு கேட்டான். அவனுடைய ஜாதகத்தை நன்கு பரிசோதித்த அந்த ஜோதிடர், அந்த அரசனைப் பார்த்து, ''கூடிய சீக்கிரத்தில் உன்னுடைய உறவினர்கள் அனைவரும் உன்னை கைவிட்டு விடுவார்கள். நீ ராஜ்யத்தையும் இழப்பாய். உன்னுடைய ஜாதகப்படி உனக்கு நீண்ட ஆயுள் இருப்பதால் நீ பிச்சை எடுத்துதான் வாழவேண்டும்'' என்று கூறினார். இதைக் கேட்ட அரசன் மிகவும் கோபம் அடைந்து, ஜோதிடருடைய சிரஸை எடுத்து விடும்படி கட்டளையிட்டான். அவனுடைய கட்டளையும் நிறைவேற்றப்பட்டது.

அந்த ஜோதிடர் கூறிய பலாபலன்களை நினைத்து, ராஜா நிம்மதியில்லாமல் தவித்தான். ஆகவே வேறு ஓர் கற்றறிந்த ஜோதிடரை ஸபைக்கு அழைத்து வரும்படி மந்திரிக்கு கட்டளையிட்டான். மந்திரியும் ஜோதிட ஶாஸ்த்ரத்தில் வல்லவரான ஒரு ஜோதிடரை ஸபைக்கு அழைத்து வந்தான். அரசன் தன்னுடைய ஜாதகத்தைக் காண்பித்து பலாபலன்களை கணித்துக் கூறுமாறு கேட்டான். ஜோதிடரும் ராஜாவின் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு, ''உங்களுடைய உறவினர்கள் அத்தனை பேரும் கைவிட்டாலும் அரசாட்சி உங்களை

விட்டுப்போனாலும் கூட உங்களுடைய உயிர்க்கு யாராலும் எந்த ஆபத்தும் ஏற்படுத்த முடியாது. அவ்வளவு வலுவான நல்ல ஜாதகம் உங்களுடையது என்று கூறினார். அரசனும் மிகவும் மகிழ்ந்து பல பரிசுகளைக் கொடுத்து அனுப்பினான்.

முதல் ஜோதிடர் சொன்ன விஷயத்தை தான் இரண்டாவது ஜோதிடரும் சொல்லியிருக்கிறார் அல்லவா? ஆனால் முதல் ஜோதிடருக்கு கிடைத்ததோ சிரச்சேதம். இரண்டாவது ஜோதிடருக்கு கிடைத்தது பரிசு. காரணம் என்ன? முதல் ஜோதிடருக்கு இடம், பொருள் அறிந்து அழகாக விஷயத்தை எடுத்துச் சொல்லத் தெரியாததே காரணம்.

ஆகவே குழந்தைகளே! எந்த ஒரு விஷயத்தையும் இடம், பொருள், ஏவல் அறிந்து அதற்குத் தகுந்தார்போல் சொல்ல வேண்டும்.

---

நம்மிடம் ஒருகால் பகவான் ப்ரத்யக்ஷமாகி ஏதாவது வரம் வேண்டுமா? என்று கேட்டால் நாம் மீண்டும் சிறு குழந்தையாக ஆகிவிடவேண்டும் என்று கேட்கலாமோ என தோன்றும் எனக்கு. நாம் இதுநாள் வரையில் செய்த எந்த கார்யங்களை எல்லாம் தவிர்த்திருக்கலாம் என்று தோன்றுகின்றதோ அவற்றையெல்லாம் தவிர்த்து இதையெல்லாம் செய்யாது விட்டுவிட்டோமே என்று வருந்துகின்றோமோ அவற்றையெல்லாம் செய்ய வாய்ப்பு கிடைத்துள்ளது என்று நினைத்து அவைகளையெல்லாம் செய்து முடித்துவிடலாமே என்று தோன்றும்.

நமக்கு வாழ்க்கையில் ஒரு விபத்தோ ஒரு துக்கமோ ஏற்பட்டு அதிலிருந்து நாம் இறைவன் அருளினால் காப்பாற்றப்பட்டிருந்தால் அதற்குமேல் நாம் வாழும் ஒவ்வொரு நாளும் இறைவன் போட்ட பிச்சை என்று நினைத்து நாம் நம்முடைய வாழ்க்கை முழுவதுமே பகவானுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# ஊழ்

உலகத்தில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கு மட்டுமல்லாமல், தனி மனிதனின் வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளும் கூட ஏற்கனவே தீர்மானித்தபடிதான் நடக்கின்றன என்பது நம்முடைய மதத்தின் அடிப்படை கொள்கையாகும். ரமணமஹரிஷி போன்ற மஹாத்மாக்களும் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் அவரவர் ப்ராரப்தப்படிதான் நடைபெறுகிறது என்பதாகக் கூறியுள்ளனர். விதிவழிதான் மதி செல்லும் என்பது ஆன்றோர் வாக்கு. சிலர் விதியை மதியால் வெல்லலாம் என்பர். விதியை மதியால் வென்றால், அதுவே அவனது விதியாகும் என்பார்கள் சிலர். லோகாயதர்களும், நாஸ்திகர்களும் அவரவருடைய முயற்சியினால்தான் எல்லாம் நடக்கின்றது என்பார்கள். இவ்விஷயத்தைப் பற்றி திருக்குறளில் ஊழ் என்ற அதிகாரத்தில் தெய்வப்புலவரான வள்ளுவர் என்ன கூறுகின்றார் என்று பார்ப்போம்!

1. ஒருவனுடைய ஊழின்படி அவனுக்கு பொருள் வந்து அடைய வேண்டிய காலம் வந்துவிட்டால் அவனிடத்தில் முயற்சியானது தானாகத் தோன்றும். அதேபோல், அவனை விட்டு பொருள் போகவேண்டிய காலம் வந்துவிட்டால், சோம்பலானது தானாக வந்து குடியேறிவிடும் என்பதை

   ***''ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்***
   ***போகூழால் தோன்றும் மடி''*** என்ற குறளில் கூறுகிறார்.

2. ஊழின்படி ஒருவனுக்கு பொருள் இழக்கவேண்டிய காலம் வந்துவிட்டால், அவனிடம் அறியாமை தானாக வந்து குடிகொள்ளும், அதே போல், பொருள் சேர்வதற்கான காலம் வந்துவிட்டால் அவனது அறிவை ஊழ்வினை பெருக்கும். இதை

   ***''பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்***
   ***ஆகலூழ் உற்றக் கடை''*** என்கிறார்.

3. ஒருவன் கணக்கில்லாமல் நுட்பமான நூல்களைப் படித்தாலும், எவ்வளவுதான் முயற்சி செய்து நல்ல ஆசானிடம் படித்தாலும்

கூட, அவனுடைய ஊழ்வினைக்கு தகுந்தாற்போலத்தான் அவனுடைய அறிவு மேம்படும் என்பதை

*''நுண்ணிய நூற்பல கற்பினும் மற்றுந்தன்*
*உண்மை அறிவே மிகும்''* என்ற குறளில் கூறுகிறார்.

4. இப்பிறவியில் பொருள்களை அடைவதற்கும் ஒருவன் செய்யும் ஊழ்வினை ஆனது வேறு. அதேபோல் இப்பிறவியில் அறிவை அடைவதற்கு செய்யவேண்டிய ஊழ்வினை வேறு. அதனால்தான் உலகத்தில் மிகச்சிலரிடத்திலேயே அறிவும், செல்வமும் சேர்ந்திருக்கிறது. இதை

*''இருவேறு உலகத்து இயற்கை திருவேறு*
*தெள்ளிய ராதலும் வேறு''* என்கிறார்.

5. ஒருவனுக்கு ஊழ்வினைப்படி செல்வத்தை அடைவதற்கான யோகம் இல்லாமல் இருக்குமானால் பொருள் சேர்க்க அவன் எடுக்கும் எல்லா நல்ல முயற்சிகளும் தீமையில் சென்று முடிந்துவிடும். அதேபோல், ஒருவனுக்கு ஊழ்வினைபடி பொருள் வந்து சேரும் காலம் வந்துவிட்டால், அவன் செய்யும் தீய செயல்கூட நன்மையில் முடிந்துவிடும். இதை

*''நல்லவை எல்லா அந்தீயவாம் தீயவும்*
*நல்லவாம் செல்வம் செயற்கு''* என்கிறார்.

6. ஊழ்வினையின்படி ஒருவருக்கு ப்ராப்தம் இல்லாத பொருளை, அவன் எவ்வளவுதான் தன்னிடம் இருத்திக்கொள்ள முயற்சி செய்தாலும், அப்பொருள் அவனை விட்டு சென்றே தீரும். அதுபோல், வாழ்வினையின்படி ஒருவனுக்கு ப்ராப்தமுள்ள பொருளை, அவன் எவ்வளவுதான் முயன்று தன்னிடம் இருந்து விலக்கப் பார்த்தாலும், அது அவனை விட்டுப் போகவே போகாது என்று

*''பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்*
*சொரியினும் போகா தம''* என்னும் குறளில் கூறுகிறார்.

7. பொருள் ஒருவனிடம் சேர்வதற்கும், அது அவனிடம் நிலைப்பதற்கும், பொருள் சேர்க்கவேண்டும் என்ற அவா

வருவதற்கும், ஊழ்வினைதான் காரணம் என்று மேற்கூறிய குறள்களின் மூலம் சொல்லி வந்த வள்ளுவர், அப்படி ஊழ்வினையின்படி ஒருவனிடம் வந்து சேர்ந்த கோடிக்கணக்கான பொருளை ஒருவன் அனுபவிப்பதற்கும் ஊழ்வினை வேண்டும்.

*''வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி*
*தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது''*

அத்தகைய ஊழ்வினை இல்லாமல் அப்பொருளை அனுபவிக்க இயலாது என்கின்றார்.

8. ஒருவனுக்கு ஊழ்வினையால் வரும் துன்பங்களை அவனுக்கு வராமல் செய்ய ஒருவனால் முடியுமானால், அல்லது ஏதோ ஒரு காரணத்தால் அத்தகைய துன்பங்கள் வராது நீங்குமானால், நுகரும் பொருள் இல்லாத வறியவர்கள் துறவு மேற்கொள்வார்கள் என்கின்றார். இதை

*''துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால*
*ஊட்டா கழியும் எனின்''* என்கிறார்.

9. ஊழ்வினையின்படி ஒருவனுக்கு வாழ்க்கையில் செல்வமும், அறிவும் பல நன்மைகள் வந்து சேரும்போது, அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு அனுபவிக்கும் ஒருவன் ஊழ்வினையின்படி துன்பம் அனுபவிக்கும்போது, அந்த காலத்தில் துன்பப்படுவது ஏன்? என்று

*''நன்றாங்கால் நல்லாவாக் காண்பவர் அன்றாங்கால்*
*அல்லற் படுவ தெவன்''* வினவுகிறார் தெய்வப்புலவர்.


10. ஊழை விட மிகுந்த வலிமையுடைய பொருள் உலகத்தில் எதுவும் இல்லை. அத்தகைய ஊழை விலக்குவதற்காக ஏதாவது ஒரு வழி கண்டுபிடிக்க ஆராய முற்பட்டாலும் அங்கும் அவ்வூழ் வந்து முன்னிற்கும். இதையே தெய்வப்புலவர்

*''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று*
*சூழினுந் தான் முந்துறும்''* என்று கூறுகின்றார்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 2 (தொடர்ச்சி)

அவததாஸ்பாபாவும், ஸ்ரீ க்ருஷ்ணனும் கோலோகத்தில் ஒருவருக்கொருவர் ஊட்டிக்கொண்டு விளையாடுவதை அவருடைய உச்சிஷ்ட ப்ரஸாதம் சாப்பிட்ட ஒரு இளைஞன் பார்த்தது பற்றி சென்ற இதழில் பார்த்தோம். இந்த இதழில்.......

ஒரு வங்காள தேசத்து பக்தர் அவததாஸ்பாபாவிடம் வந்து தீக்ஷையும் ஸன்யாஸமும் பெற்றுக்கொண்டார். ஆனால், அவர் மிகவும் நிலையில்லாத குணமுள்ளவர். ஒரு இடத்தில் அவரால் நிலைத்து நிற்கமுடியாத ஸ்வபாவம் உள்ளவர். சிறிது நாட்களிலேயே பாபாவிடம் பாரத தேசத்தைச் சுற்றிவருவதற்கு, அனுமதி கேட்டார். ஆனால் பாபா அனுமதிக்கவில்லை. இருப்பினும் அவரோ, தன் மூட்டை முடிச்சுகளுடன் கிளம்பிவிட்டார். ''எங்கே போகப்போகிறாய்?'' என்று பாபா கேட்டார். அதற்கு, ''எங்கும் இல்லை. சும்மா சிறிது காலம் சுற்றிவிட்டு இங்கு வருவேன்'' என்றார். பாபா அவரிடம், ''குருவின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் உன்னால் எதையும் ஸாதிக்க முடியாது. குரங்கைப் போல் சுற்றுவதால் ஒரு லாபமும் கிடையாது'' என்றார். ஆனால் அவரோ, ''நான் இத்தனை நாட்கள்



குருவிடம் கட்டுப்பட்டுத்தானே இருந்தேன். என் வாழ்நாள் முழுவதும் கீழ்படியவேண்டுமா என்ன?'' என்று சொல்லிவிட்டு ஆஸ்ரமத்தை விட்டு வெளியேறினார்.

அநேக ஆண்டுகள் அவரைப்பற்றிய ஒரு தகவலும் பாபாவிற்குக் கிடைக்கவில்லை. பாபா அவரைப் பற்றி அடிக்கடி கவலைப்படுவார். ஒரு நாள் அவர் ஜபம் செய்துகொண்டே ஆஸ்ரமத்தில் உலாவி வரும் ஸமயம், ஒரு சிறிய குரங்கு உள்ளே வந்து அவரது சரணங்களைப் பற்றிக்கொண்டது. பாபாவிற்கு அந்தக் குரங்கு, அந்த வங்காள பக்தர்தான் எனப் புரிந்து போயிற்று. அந்த பக்தர் இறந்து, குருவின் பேச்சைக்கேட்டு நடக்காததால் மறுபடியும் குரங்காகப் பிறந்திருக்கிறார். ஆயினும், அவருக்கு குருவிடம் சிறிது காலம் பக்தி இருந்த காரணத்தால், அவருக்கு தான் முன் ஜன்மத்தில் குருவிடம் செய்த தவறு நினைவுக்கு வந்தது. மனதில் பச்சாதாபம் தோன்றி தன் குருவைத் தேடி வந்து, மன்னிப்பு கேட்க வந்துவிட்டார் குரங்காக பிறந்தவுடன். அவததாஸ் பாபாவிற்குத்தான் என்ன கருணை! உடனே அந்தக் குரங்கிடம் மிகவும் அன்புடன், ''நல்லது செய்தாய்! இங்கு வந்தாய்! இனி எங்கும் செல்லாமல் இங்கேயே இரு! ஆஸ்ரமத்திற்கு அருகிலேயே இருந்துகொண்டு இரண்டு வேளையும் ப்ரஸாதத்திற்கு வந்து விடு!'' என்றார். இப்படிச் சொல்லிவிட்டு அந்தக் குரங்கின் கழுத்தில் துளசி கண்டிகை கட்டிவிட்டார். ஆஸ்ரமவாஸிகளை அந்தக் குரங்கை நன்றாக கவனித்துக்கொள்ளச் சொன்னார்.

அந்தக் குரங்கும் ஆஸ்ரமத்துக் கூரையிலேயே வசித்து, இரண்டு வேளையும் ப்ரஸாதத்திற்கு சரியாக வந்து வாங்கிக் கொள்ளும். அவததாஸ் பாபா பாகவதம் சொல்லும்பொழுது அழகாக ஓரிடத்தில் இருந்துகொண்டு ஶ்ரவணம் செய்யும். பாபா அந்தக் குரங்கை, ''ராமதாஸா'' என்று விளிப்பார். ஒரு நாள் அவர், ''இரண்டு நாளாக ராமதாஸனைக் காணோமே! நீங்கள் அவனை ஏன் கவனிக்கவில்லை?'' என்று ஆஸ்ரமத்து ஜனங்களை விசாரித்தார். அவர்கள் உடனே ராமதாஸைத் தேடச் சென்றனர். ஆஸ்ரமத்து மாடியில் ராமதாஸை இறந்த நிலையில் கண்டனர். பாபாவிடம் இது பற்றித் தெரிவித்ததும் அவர் ''ராமதாஸன் பெரிய வைஷ்ணவன். அவனுக்கு ஈமக்கிரியைகள் ஒரு உத்தம வைஷ்ணவனுக்குச்

செய்வதைப்போல் செய்யவேண்டும்'' என்று உத்தரவிட்டார். ராமதாஸை நன்கு அலங்கரிக்கப்பட்ட விமானத்தில் எழுந்தருளச் செய்து நாம ஸங்கீர்த்தனத்துடன் யமுனை வரை அழைத்துச் சென்று அங்கு யமுனை அன்னையின் மடியில் தவழவிட்டனர். அன்று அவனது நினைவில் அன்னதானமும் செய்யப்பட்டது.

ஒரு ஸமயம் அவததாஸ் பாபாவிற்கு ஸ்ரீக்ருஷ்ணனின் ஒரு விசித்திரமான தர்சனம் ஏற்பட்டது. ஸ்ரீக்ருஷ்ணன் ஸ்ரீமத் பாகவத க்ரந்தத்தை ப்ரதக்ஷிணம் செய்வதாக ஒரு காட்சி, அவருக்கு பாகவத பாராயணம் முடிந்தவுடன் ஏற்பட்டது. இதில் என்ன விசித்திரமென்றால் அனைவரும் தனது உபாஸனைப் பொருளையோ, மூர்த்தியையோ தானே ப்ரதக்ஷிணம் செய்வர். அப்படி இருக்கும்பொழுது க்ருஷ்ணன் தனது பாகவதத்தையே ஏன் ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும்?

ஸ்ரீமத் பாகவதம் க்ருஷ்ணனுக்கும், அவனது பக்தர்களுக்கும் இடையே உள்ள ப்ரேம கதைகளைப் பேசுகிறது. கண்ணனுக்கு பக்தர்கள் அவனிடம் செலுத்தும் அன்பினால்தான் ஆனந்தம் அதிகமாகிறது. தன்னை 'பக்த பராதீனன்' என்று சொல்லிக் கொள்வதில் க்ருஷ்ணன் மகிழ்ச்சி அடைகிறான்.

எனவே, பக்தர்களின் பெருமையைப் பாடும் ஸ்ரீமத் பாகவதத்தை தனது அவதாரத்தைக் காட்டிலும் உயர்வாக மதித்து க்ருஷ்ணன் ஸ்ரீமத்பாகவத க்ரந்தத்தை பரிக்ரமா செய்தானாம். அன்று அவததாஸ்பாபாவின் பாகவத உபன்யாஸத்தைக் கேட்டு பேரானந்தம் அடைந்த கண்ணன், பாபாவை ஆனந்தப்படுத்தும் அளவுக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என்று யோசித்து தனது தர்சனத்தைத் தவிர பாபாவிற்கு வேறென்ன ஆனந்தம் தர முடியும் என்று நினைத்து பாகவத க்ரந்தத்தை பரிக்ரமா செய்து காட்சி தந்தானாம்.

ஸ்ரீஅவததாஸ்பாபா தனது 110வது வயது வரை பாகவத படனத்தையும் பூஜையையும் தொடர்ந்து செய்து வந்தார். 1937-ஆம் ஆண்டு அவர் தேகம் தளர்ந்து, ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாத அளவு க்ஷீணமாகிவிட்டது. அவரைத் தூக்கிக்கொண்டுதான் செல்ல வேண்டும் என்ற நிலையில் இருந்தார். பங்குனி மாத க்ருஷ்ணபக்ஷத்து இரண்டாம் நாள் அவரது நிலை மிகவும் மோசமாகி அவர் அசைவின்றி கிடந்தார். உடனே பக்தர்கள்

கீர்த்தனம் செய்தனர். அவர்கள் ''ஸ்ரீக்ருஷ்ண சைதன்ய ப்ரபு நித்யானந்தா'' என ஆரம்பித்தனரோ இல்லையோ, பாபா எழுந்து நின்று ஆவேசத்துடன் நடனம் ஆட ஆரம்பித்துவிட்டார். ஶிஷ்யர்கள் பயந்து போய் கீர்த்தனத்தை நிறுத்தி அவரைப் படுக்க செய்தனர். பிறகு அவரது நிலை பழையபடி கவலைக்கிடமாகி விட்டது. அவர் ஏற்கனவே சொல்லியிருந்ததுபோல் ஞான கூடனி என்ற இடத்தில் இருந்து ரஜஸ்ஸைக்கொண்டு வந்து பரப்பி அதன்மேல் அவரைக் கிடத்தினர். ப்ருந்தாவனத்தில் இந்த ஞான கூடனி என்ற இடத்தில்தான் உத்தவன் கோபிகைகளுக்கு ஞானத்தை போதித்தானாம். இப்படிக் கிடத்தியதும் அவததாஸ்பாபாவின் உதடுகள் மெதுவாக ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து ஸ்லோகங்களை முணுமுணுக்க ஆரம்பித்தன. அடுத்த நாள் காலை 3 மணிவரை இப்படி ஸ்லோகங்களைச் சொல்லிவிட்டு, அவர் ப்ரஹ்ம முகூர்த்தத்தில் ஸ்ரீக்ருஷ்ணனின் நிரந்தர ராஸலீலையில் ஐக்கியமானார்.

**(தொடரும்)**

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### ஜூலை 10-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகள் பத்ராசலத்தில் நடைபெறும் ராதா கல்யாண மஹோத்ஸவத்தில் கலந்துகொள்கிறார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் தங்கும் இடம் : KSR Block, பத்ராசலம்.

### ஜூலை 24-ந் தேதி

ஆடிப்பூரத்தை ஒட்டி சென்னை ப்ரேமிகபவனத்தில் ஆண்டாள் திருக்கல்யாணம் நடைபெறும்.

### ஜூலை 31-ந் தேதி

ஆஷாட ஏகாதஶியை ஒட்டி சென்னை ப்ரேமிக பவனத்தில் விசேஷ திவ்யநாமம் நடைபெறும்.

### ஆகஸ்ட் 4-ந் தேதி

ஆவணி அவிட்டம் - யஜுர் உபாகர்மா, சென்னை ப்ரேமிக பவனத்தில் நடைபெறும்.

# மாணவர்களுடன் சில வார்த்தைகள்

**- ''ஆத்ரேயன்''**

**புத்தகத்தில் இருக்கும் வித்யையும், பிறரிடம் இருக்கும் தனமும் நமக்கு பயன்படாது :**

முட்டாள் தனது வீட்டில் மட்டுமே கௌரவிக்கப்படுகிறான். தனவந்தர் தனது கிராமத்தில் மட்டுமே மரியாதைக்குரியவர் ஆகிறார். அரசன் தனது ராஜ்யத்தில் மட்டுமே போற்றப்படுகிறான். ஆனால் கற்றவர்களுக்கோ சென்ற இடமெல்லாம் சிறப்பு.

स्वगृहे पूज्यते मूर्खः स्वग्रामे पूज्यते प्रभुः ।
स्वदेशे पूज्यते राजा विद्वान् सर्वत्र पूज्यते ॥

ஆகவே, கல்வி மிகவும் அவசியம். கல்வி இருவிதம். லௌகீக வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி; பள்ளி, கல்லூரிகளில் கற்பது. மற்றொன்று ஆன்மிக வாழ்க்கை, முக்தி ஸாதனத்திற்கு ஆனது. இதை குருமுகமாக அனுபவரீதியில் அடையலாம். இரண்டுமே முக்கியம்.

ஒருவர் நல்ல குலத்தில் பிறந்தவர். அழகு, இளமை இருந்தது. ஆனால் கல்வி அறிவு இல்லை - சிம்சுபா புஷ்பங்கள் அழகாக இருப்பினும் அதற்கு மணம் இருப்பதில்லை. அதைப் போல, கல்வி அறிவு இல்லாதவருக்கு, படிக்காதவருக்கு, பணம், அழகு, இளமை இருந்தும் பலன் இல்லை.

रूपयौवन संपन्ना विशालकुल संभवाः ।
विद्याहीना न शोभन्ते निर्गन्धाः किंशुका इव ॥

படிப்பதற்கு சுறுசுறுப்பு தேவை. சோம்பேறியாக இருப்பவன் கல்விமானாக இருக்கமுடியாது. சிண்டில் கயிற்றைக்கட்டிக் கொண்டு படி என்பது பழமொழி. மிதமான ஆகாரம், மிதமான தூக்கம், சிறந்த உழைப்பு ஆகியவை தேவை. ஆகவே சோம்பேறியாக இருந்தால் கல்வி வராது. படிக்காதவனுக்கு செல்வம் இராது. பணம் இல்லையேல் நண்பர்கள் இல்லை - நல்ல நண்பர் இல்லாவிடில் சுகம் கிடையாது. ஆகவே எழுத்தறிவு அவச்யம்.

अलसस्य कुतो विद्या अविद्यस्य कुतो धनम् ।
अधनस्य कुतो मित्रः अमित्रस्य कुतः सुखम् ॥

அக்காலத்தில் கல்வி பயில புத்தகங்கள் இல்லை. குருகுல வாழ்க்கைதான். குரு சொல்லிக்கொண்டே இருப்பார். மாணவன் கேட்டு, அதை மனதில் பதிவு செய்துகொள்ள வேண்டும். காதால் கேட்பது, பிறகு அதை ஞாபகம் வைத்துக்கொள்வது. அவைகள்தான் ஸ்ருதி, ஸ்ம்ருதி. இப்பொழுது புத்தகங்கள் வந்துவிட்டன. நுனிப்புல் போன்ற கல்வி. அவசியமானால் புத்தகங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். கம்ப்யூட்டரில் வெப்ஸைட், (CD) சிடிக்கள். படித்ததை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதற்குப் ப்ரயத்னம் தேவை.

அதே மாதிரி பணம் செலவு செய்ய நம்மிடம் இருக்க வேண்டும். அந்நியரிடம் இருந்தால், தக்க ஸமயத்திற்குப் பயன்படாது. புத்தகத்தில் இருக்கும் பாடங்கள், ஒருவனுக்கு கல்வி அறிவு ஆகாது. அதுபோல மற்றவர்களிடம் இருக்கும் பணம், பணம் என்று கருதப்படமாட்டாது. ஏனென்றால் அதனை நாம் செலவழிக்க முடியாதே.

पुस्तकस्था तु या विद्या परहस्तगतम् धनम् ।
कार्यकाले समुत्पन्ने न सा विद्या न तद् धनम् ॥

(தொடரும்)

ஒரு ஸமயம், சென்னையில் மழை இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவாளிடம் பக்தர்கள் அணுகி, ''நீண்ட நாட்களாக மழையில்லை. மழை பெய்ய வழி சொல்ல வேண்டும்'' என்று ப்ரார்த்தித்தனர்.

ஸ்ரீ மஹாபெரியவாள் அதற்கு, ''சென்னையில் யாரோ சண்டி ஹோமம் செய்து சரியாக அன்னதானம் செய்யவில்லை. அதனால்தான் இப்படி மழை பெய்யவில்லை. ஒவ்வொருவரும் தங்களுடைய வீட்டில் பத்து பேருக்கு அன்னதானம் செய்தால் மழை பெய்யும்'' என்று அனுக்ரஹித்தார். பக்தர்களும் ஸ்ரீ மஹாபெரியவாள் சொன்னபடி செய்ய மழையும் பெய்தது.

- பம்மல் ஸ்ரீ ஏகாம்பர அய்யர் ஸ்ரீ மஹா பெரியவாளைப் பற்றி சொன்னது

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 70

*ஞமலியிற்கேடாய் நானென்னுறுதியாய்*
*நாடி நின்னுருவேன் அருணாசலா*

'ஞமலி' என்றால் தமிழில் நாய் என்று அர்த்தம். 'ஞமலியிற் கேடாய்' என்றால் நாயை விட கேவலம் என்று அர்த்தம். மிருகங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஸ்வபாவம் உண்டு. நரி என்றால் தந்திரமான நரி என்கிறோம். அதுபோல், நாயிடம் உள்ள ஒரு தனி குணம் நன்றி. நாயின் குணமான நன்றியும், எஜமான விஸ்வாசமும் வேறு எந்த மிருகத்திடமும் கிடையாது. உலகில் பலர், பல மிருகங்களை வளர்க்கின்றனர். ஆனால், நாயை மட்டுமே பெரும்பாலானவர் வளர்க்கின்றனர். காரணம், நாய்க்கு மட்டுமே அன்பு வைக்கத் தெரிகிறது.

குரங்கு பிறந்தவுடன் தனது குட்டியை பிரிந்து போகிறது. குட்டிதான் தாய்க்குரங்கை பிடித்துக்கொள்ள வேண்டும். ஒரு ஆபத்து வந்தால் மிருகங்கள் திசைக்கு ஒன்றாக ஓடிப்போய் விடும். நாய் அப்படி இல்லை. உதாரணமாக, நாய் பிடிக்கும் ஒருவன் வந்தால் குட்டிகளோடு இருக்கும் நாயை பிடிக்க வந்தால், அந்த தாய் நாயானது, தன் குட்டிகளை ஓரிடத்தில் பத்திரமாக விட்டுவிட்டு, தான் அந்த நாய் பிடிப்பவனுக்கு போக்கு காட்டி, அவனை தன்பின் வரச் செய்து, தான் மாட்டிக்கொள்ளும். ஆனால், குட்டிகள் பிழைத்துக்கொள்ளும். தான் அன்பு செய்யும் ஜீவனுக்காக நாய் தன்னையே தியாகம் செய்யும் என்பது இதிலிருந்து தெரிகிறது.

ஒரு பெரிய வீட்டில், பல வேலைக்காரர்கள் இருப்பர். அந்த எஜமானருக்கு பல சொத்துகள் உண்டு. அவருக்கு பல அலுவல் உண்டு. வீட்டில் அவர் இருக்கும் நேரம் மிகக் குறைவாக இருக்கும். அவர் ஒரு நாயை வளர்த்து வருவார். அவர் வீட்டில் இருக்கும் நேரம் மிகக் குறைவு என்பதால், தனது நாயிடம் ஓரிரு நிமிடங்களே செலவிடுவார். அப்பொழுது அதனுடன் விளையாடுவார். ஸமயத்தில் அவருக்கு இதற்கு கூட நேரமிராது. அந்த நாயை அந்த வீட்டு வேலைக்காரர்கள் நன்கு கவனித்துகொள்வர். அதற்கு உணவு தருவதோ அல்லது குளிப்பாட்டுவதோ அல்லது அதற்கு பொழுதுபோக்காய் வெளியில் அழைத்துச் செல்வதோ எல்லாம் மிக சரியாய் நடக்கும். அந்த நாயும் அதற்கு கட்டுப்பட்டு இருக்கும். இருப்பினும், அந்த

வேலைக்காரர்களிடம் அது ஒன்றும் மிகவும் அன்பாயிராது சில. ஸமயத்தில், அவர்களிடமே சண்டையிடும். நாள் முழுவதும் தன்னிடமிருக்கும் வேலைக்காரனிடம் உதாசீனமாயிருக்கும். அந்த நாய், ஓரிரு நிமிடமே தன்னிடமிருக்கும் தன் எஜமானன் வந்தால், படு குஷியாகிவிடும். அவர் பின்னால் வாலை குழைத்துக் கொண்டே ஓடும். அவர் அந்த நாயின் செல்லப் பெயரை சொல்லிக் கொண்டே உள்ளே போய்விடுவார். இந்த நாயோ அவர் நினைவாகவே இருக்கும். தனது உண்மையான எஜமானன் தன்னுடனிருக்கும் வேலையாள் அல்ல. எப்பொழுதோ வரும் வீட்டுக்காரரே தன் எஜமானன் என்று ஸூக்ஷ்மமாய் நாய் புரிந்து கொண்டு விடுவதால்தான், அந்த நாய் அந்த எஜமானனிடம் அன்பு செலுத்துகிறது.

அது மட்டுமில்லை. அந்த நாயிடம் மற்றொரு விசேஷமான குணமும் இருக்கிறது. அந்த நாயை அவருடைய எஜமானரின் வீட்டில் இருந்து பிரித்து வெளியில் எங்கோ விட்டு வந்துவிட்டால், அது எப்படியோ மோப்பம் பிடித்துக்கொண்டு வந்துவிடும். அதை எங்கு விட்டாலும், தான் அன்பு செலுத்தும் எஜமானனிடமே திரும்பி வரும். அவரைக் கண்டால்தான், அவரிடத்தில் இருந்தால் தான் அதற்கு நிம்மதி. அந்த நாயிருக்குமிடம், வசதிக்குறைவானதோ, இல்லையோ எப்படியிருந்தாலும் அது எஜமானனை விட்டு விலகாது. சாதாரணமாகவே, நாய்க்கு மோப்ப சக்தி உண்டு. ஓரிடத்தில் உள்ள ஒரு பொருளை மறைத்து வைத்து விட்டு, அதை கண்டுபிடிக்க சொன்னால், நாய் கண்டுபிடித்து விடும். கண்ணுக்கு தெரியாத இந்த ஒரு வித்தை, நாய்க்கு தெரிகிறது. அதனால்தான் மிக நவீனமான இந்த காலத்திலும் கூட நாயையே பெரிதும் பல இடங்களில் உபயோகப்படுத்துகின்றனர். (உதாரணமாக, கண்ணி வெடி கண்டுபிடிப்பு, மறைந்துள்ள வெடிகுண்டு, திருட்டு குற்றம் போன்ற விஷயங்களில் நாயின் மோப்ப சக்தி பெரிதும் உதவுகிறது).

ஆக மற்ற மிருகங்களைவிட நாய் பல விதங்களில் உயர்வானதே. நாய்க்கு உள்ள இந்த நன்றி, எஜமான விசுவாசம், எங்கிருந்தாலும் தனது யதாஸ்தானத்துக்கே திரும்பும் மோப்ப சக்தியான புத்தி ஆகியவை பிற மிருகங்களிலும், பக்ஷிகளிலும் இல்லாதது ஆச்சரியமில்லை. மனிதனிடம் கூட இவைகளில் ஒரு குணம்கூட இல்லை என்பதுதான் யதார்த்தம். ஆதலால், 'ஞமலியிற் கேடாய்' நாயை விட கேவலம் என்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

(தொடரும்)

# மஹாபாரத கதைகள்

— **நளோபாக்யானம்** (தொடர்ச்சி)

ருதுபர்ணராஜன், தமயந்தியின் ஸ்வயம்வரத்திற்காக குதிரைகளை ஏற்பாடு செய் என்று நளனிடம் சொன்னவுடன், நளன் அதிர்ச்சி அடைந்தான். ஆனால், அவன் மனதில் ஒரு ஸந்தேகம் இருந்தபடியால், இது உண்மையா அல்லது பொய்யா என்று அறிய நாமும் நேரில் சென்று பார்ப்பதே சரி என்று முடிவு செய்தான். ஒரே நாளில் விதர்ப்ப தேசம் செல்லமுடியுமா என்று ருதுபர்ணன் கேட்க, நளன் அது முடியக்கூடிய விஷயம் என்று சொல்லி, அதற்கான குதிரைகளைத் தேர்ந்தெடுக்கச் சென்றான்.

நளன் குதிரைக்கலையை மிக நன்கு அறிந்தவனாகையால், நன்கு, பத்துவிதமான லக்ஷணங்களும் பொருந்திய மெல்லிய, காந்தியுள்ள பலமான, நல்ல ஜாதிகளை தேர்வு செய்தான். ருதுபர்ணன் அதைக்கண்டு ஐயமுற்று, 'இவை நம்மைக்கொண்டு சேர்க்குமா' என நளனிடம் வினவினான். நளன் பதிலுக்கு குதிரைகளின் லக்ஷணங்களைச் சொல்லி ருதுபர்ணனுக்கு நம்பிக்கை ஊட்டினான். ருதுபர்ணனுடன் வார்ஷ்ணேயனும் சென்றான்.

நளன், குதிரைகளைத் தேரில் பூட்டியதும், ருதுபர்ணன் தேரில் ஏறினான். அவன் ஏறியவுடன் அந்த நல்ல குதிரைகள் முழங்கால்களால், சரிந்து விழுந்தன. ருதுபர்ணன் மறுபடி கவலையுற்றான். ருதுபர்ணன் குதிரைகளுக்கு பலம் போதாதோ என ஐயுற்றான். ஆனால், அந்த ஸகுனமோ, அவன் செல்லும் காரியம் நிறைவேறாது என்பதைக் குறிப்பது போலிருந்தது. நளன் குதிரைகளைத் தேற்றி, தேரை ஓட்டினான். முறையாக ஓட்டப்பட்ட குதிரைகள் தேரை வாயுவேகமாக ஓட்டின. ருதுபர்ணன் அதைக் கண்டு மயங்கினான். வார்ஷ்ணேயன் தனது பழைய ராஜாவான நளன், இவ்வாறு ஓட்டும் திறமை படைத்தவன் என்று அறிந்தவனானதால், பாகுகனை 'நளனோ' என்று சரியாக ஸந்தேகித்தான். பின்னர் பாகுகனின் சரீர அமைப்பையும், அவன் தேரோட்டும் விதத்தையும் கவனித்து ஆராய்ந்து, அவன் நளன் என்று முடிவு செய்து ஸந்தோஷித்தான்.

ரதம் விரைவாகச் சென்றது. அப்பொழுது அடித்த காற்றில் ருதுபர்ணனின் அங்கவஸ்த்ரம் பறந்தது. அவன் உடன் நளனிடம் தேரை நிறுத்தச் சொன்னான். நளனோ, ''நீ சொல்லும் நேரத்தில் ஒரு யோஜனை தூரம் தாண்டியாகிவிட்டது. இனி வஸ்த்ரம் எடுப்பது இயலாது'' என்று தேரை ஓட்டிக்கொண்டே சொன்னான். இதனால், அதிருப்தியான ருதுபர்ணன் வழியில் உள்ள ஒரு தான்றி மரத்தைக் கண்டு, ''அந்த மரத்தின் கீழ் உள்ள (உதிர்ந்துள்ளவை) இலைகள், மேலுள்ள இலைகளைவிட நூறு அதிகம். பழங்கள் கீழுள்ளவை மேலுள்ளவையை விட ஒன்று அதிகம். இதில் இரண்டு கிளைகளில், ஒன்றில் ஓர் இலை அதிகம். மற்றொன்றில் ஒரு பழம் அதிகம். இம்மரத்தில் இரண்டாயிரத்து தொன்னூற்று ஐந்து பழங்கள் உள்ளன'' என்று நளனிடம் கணக்கு செய்து சொன்னான். மேலும் அவன் நளனிடம், ''எல்லோரிடமும், எல்லா ஞானமும், கலையும் சேர்ந்திருப்பதில்லை'' என்றான். நளனுக்கு குதிரைக்கலை தெரிந்திருந்தாலும், தான் அவனை விட கணிதத்தில் வல்லவன் என்பதைக் காட்டினான்.

ஒரு கணம் நளன் ஆச்சரியப்பட்டான். மறுகணம் தேரை நிறுத்தி தேரிலிருந்து இறங்கி, அரசன் சொன்னது சரியா என்பதை சோதிக்க தான்றி மரத்தை அணுகினான். ருதுபர்ணன், நளனின் எண்ணத்தை அறிந்து, அதனால் தாமதமாகுமே என்று எண்ணி அவனைத் தடுத்தான். நளனோ, தான் அரசன் சொன்னதை சோதித்துப் பார்த்த பிறகே வர முடியும் என்றும், வேண்டுமானால் வார்ஷ்ணேயனை தேர்ப்பாகனாக வைத்துச் செல்லலாமென்றும் கூறிவிட்டான். ருதுபர்ணனுக்கு அதில் இஷ்டமில்லாததால், நளனிடம், ''ஒரு கிளையை மட்டும் சோதித்து, அதில் தான் சொன்னது போலிருந்தால், திருப்தியடை'' என்றான். நளனும் அவ்வாறே செய்தான். அரசன் சொன்னது சரியாகவே இருந்தது.

ஆச்சரியப்பட்ட நளன், அரசனிடம் இந்த வித்தை அவனுக்கு எப்படி வந்தது என்றும், அதை அறிய விரும்புகிறேன் என்றும் கூறினான். ருதுபர்ணன் தான் அக்ஷஹ்ருதயத்திலும் (சூதாட்ட தேவதை மந்திரம்) மற்றும் கணக்கிடுவதிலும் வல்லவன் என்றான். இரண்டையும் நளன் கேட்டான். மேலும் தான் அவனுக்கு அச்வஹ்ருதயம் (குதிரைகலை) கற்றுத் தருவதாகவும் சொன்னான்.

உடன் ருதுபர்ணன், நளனிடம், ‘‘நான் உன்னிடம் பிறகு குதிரைக் கலையை பெற்றுக்கொள்கிறேன். நீ இப்பொழுது அக்ஷஹ்ருதயத்தைப் பெற்றுக் கொள்’’ என்றான். மேலும் நளன் காதில் அதற்கான மந்திரத்தைக் கூறினான்.

சூதாடும் கலை தெரிந்தவுடன், நளனுக்கு கஷ்டம் விலகுவதாக இருந்தது. நளன் காதில் அந்த மந்திரம் விழுந்தவுடன், அவனுக்குள்ளிருந்த கலிபுருஷன் உடன் வாயினால் கார்க்கோடக விஷத்தைக் கக்கிக்கொண்டு வெளியேறினான். அவன் வெளியேறியதை நளன் மட்டுமே அறிந்தான். நளன் இதுகாறும் தன்னைத் துன்புறுத்திய கலியை சபிக்க எண்ணினான்.

(தொடரும்)

# செய்திகள்

### ஜூன் 2-ந் தேதி— ஏகாதஶீ

ஸ்ரீ ஸ்வாமிகள் ஊரப்பாக்கத்தில் நடைபெற்ற ராதாகல்யாண மஹோத்ஸவத்தில் கலந்து கொண்டார்கள்.

### ஜூன் 5-ந் தேதி - ஸ்ரீ மஹாபெரியவாள் ஜயந்தி மஹோத்ஸவம்

மதுரபுரி ஆஶ்ரமத்தில் ஸ்ரீ மஹாபெரியவாள் ஜயந்தி கொண்டாடப்பட்டது. காலையில் ஆயுஷ்ய ஹோமம், ஆவஹந்தி ஹோமமும், மதியம் தேவார இன்னிசையும், இரவு புறப்பாடும் நடைபெற்றன.

### ஜூன் 14-ந் தேதி

சென்னை, மேற்குமாம்பலம் ஸ்ரீ A.G.S. முரளி அவர்கள் கிருஹத்தில் நடைபெற்ற ராதாகல்யாணத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

### ஜூன் 16-ந் தேதி, 17-ந் தேதி

சென்னை மயிலாப்பூர், CIT Colony Balaji Apartments ஸ்ரீ V. சுந்தரராஜன் அவர்கள் கிருஹத்தில் நடைபெற்ற ராதா கல்யாண வைபவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டார்கள்.

*கேள்வி : பல பக்தர்கள் க்ருஷ்ணனிடம் மாதுர்ய **பா**வத்தில் பக்தி செய்துள்ளனர். அவர்கள் அநேக கீர்த்தனங்களையும் பாடியுள்ளனர். என்னுடைய மனது அவைகளில் எல்லாம் செல்லமாட்டேன் என்கின்றது. நான் பக்திக்கு அதிகாரி இல்லையா? எனக்கு பக்தி வராதா? இது தவறா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : இத்தகைய ரஸ ரூபமான பக்தி மார்க்கத்திற்கு உலகில் மிகச் சிலரே அதிகாரிகள் ஆவார்கள். இத்தகையவர்கள் இந்த **பா**வத்தை அவர்களாக ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அவர்களுக்கு அத்தகைய நிலை இயற்கையாகவே இருந்தது. ஶாந்த **பா**வம், தாஸ்ய **பா**வம் போன்ற **பா**வங்களில் பக்தி செய்வதுதான் பலராலும் கைகொள்ளக்கூடியதாகும்.

உலகத்தில் ஒருவர் மிகவும் நல்லவராக இருப்பார். அவருக்கு கலைகளில் ஆர்வம் இருக்காது. அதுபோலவே, சிலர் நல்ல கலைஞர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் நல்லவர்களாக இருக்கமாட்டார்கள். ஒருவருக்கு பகவானை அடையவேண்டிய ஆசை இருந்தும், அவருக்கு ரஸரூபமான ஹ்ருதயம் இருக்காது. ஆகவே, அவரால் உபாஸனையோ, ஶாந்த, தாஸ்ய **பா**வங்களையோதான் மேற்கொள்ள முடியும் அல்லது ஞான ஸாதனம் பயிலமுடியும். ஆனால் மாதுர்ய **பா**வத்தில் ஈடுபட்டு பக்தி செய்வதற்கு ரஸரூபமான ஹ்ருதயம் தேவை. இது வெகு சிலருக்கே சித்திக்கும். ஆகவே, நீங்கள் உங்களுக்குத் தகுந்த ஒரு மார்க்கத்தில் சென்று பக்தி செய்யலாம். ஆனால், இவைகள் எல்லாம் தவறு என்று நிந்திப்பதுதான் கூடாது.

*கேள்வி : மஹான்கள் ஜீவித காலத்தில் அவர்களுடைய ஸ்தாபனங்கள் நடந்தது போல அவருடைய பிற்காலத்தில் நடப்பதில்லையே! அது ஏன்?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : எந்த ஒரு தெய்வீக ஸ்தாபனத்தையும் ஒருவருடைய தனி முயற்சியால் ஆரம்பிக்க முடியாது. இத்தகைய ஸ்தாபனங்கள் தோன்றுவதற்கு பகவானுடைய ஸங்கல்பம்தான் காரணம். அந்த மஹான்களுடைய காலத்திற்குப் பிறகு சிறிது லௌகீகமாக மாறி அது தொய்வடைந்தாலும், சிலகாலம் கழித்து அங்கேயே ஒரு ஸித்த புருஷர் தோன்றி அவர்களை வழி நடத்திச் செல்வார். ஆதிஶங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட காமகோடி மடம், சிருங்கேரி மடம் போன்றவைகள் இன்று வரை இல்லையா! அந்தந்த மடங்களில் பகவத்பாதரின் அம்சங்களாக அவ்வப்பொழுது மஹான்கள் வந்தபடியும்தான் உள்ளார்கள்.

**மங்களானி பவந்து**

*கேள்வி : பத்ராசலம் ஆழ்வார்களால் மங்களாஸாஸனம் செய்யப்பட திவ்யதேசமா?*

பதில் : ஆழ்வார்களால் மங்களாஸாஸனம் செய்யப்படவில்லை. எனினும், இந்த க்ஷேத்ரத்தில் ராமருடைய ஸாந்நித்யம் எங்கும் வ்யாபித்துள்ளது. இங்குள்ள செடி, கொடி, பசு, பக்ஷி எதிலும் ராமனுடைய ஸாந்நித்யம் வ்யாபித்துள்ளது. கோதாவரி நதி தீரத்தில் ராமபத்ரனின் ஸந்நிதி உள்ளது. இங்கு ஶங்க சுக்ரதாரியாய் கோதண்டமும் பாணமும் தரித்து சதுர்புஜனாய், ஸீதாதேவியை மடியில் உட்கார வைத்துக்கொண்டு லக்ஷ்மணன் ஸாமரம் போட ஸிம்மாஸனத்தில் அமர்ந்திருக்கிறான்.

ஒரு ஸமயம், காலகாலன் என்ற ஒரு ப்ராஹ்மணன் குருபத்னி ஸங்கமம் என்ற மஹாபாபத்தால். குஷ்டரோகம் அடைந்தான். அவனை உறவினர்களும், மற்ற ஜனங்களும் கைவிட்டுவிட்டார்கள். உண்பதற்கு உணவுகூட அவனுக்கு எங்கும் கிடைக்கவில்லை. பத்ராசலத்தில், ஸ்ரீ ராமநவமியன்று எப்பேற்பட்ட பாவிக்கும் அன்னதானம் செய்கிறார்கள் என்று கேள்விபட்டு, அங்கு போனால் உணவு கிடைக்குமே என்ற ஆசையினால் எப்படியோ ஒரு விதமாக பத்ராசலத்தை அடைந்தான்.

பத்ராசலத்தை அடைந்து கோபுர தரிசனம் செய்தவுடன் அவனது காலம் முடிந்ததால் உயிரை விட்டான். எமதூதர்கள் அந்த பாபியை தங்களுடைய லோகத்திற்கு அழைத்துச் செல்ல வந்த ஸமயத்தில், ராமபிரான், தன்னுடைய பரமபக்தரான ஆஞ்சநேயஸ்வாமியை அனுப்பி அவனை எமதூதர்களிடமிருந்து விடுவித்துக் காப்பாற்றினார்.

யார் எதிர்ச்சையாக இந்த க்ஷேத்ரத்திற்கு வருகிறார்களோ, கோதாவரியில் ஸ்நாநம் செய்கிறார்களோ, அவர்களுக்கு பத்ராசல ராமபத்ரனின் அருளினால், ராமநாம ருசி ஏற்படும். பத்ராசல ராமதாஸர் என்னும் மஹாத்மா பத்ராசலத்தில் ராமனுக்கு கோவில் கட்டி பல திவ்யநாம கீர்த்தனங்களைப் பாடியிருப்பது எல்லோருக்கும் தெரியும்.

(தொடர்ச்சி : பின் அட்டை உட்பக்கம்)

வித்யாநிதி ஸங்கோசத்துடன், ''இவரே பெரிய வைஷ்ணவர். இவருக்கு தீக்ஷை தரும் அளவுக்கு எனக்கு என்ன யோக்யதை இருக்கிறது!'' என்றார். முகுந்ததத் தீனமாக ''நீங்கள் கதாதரரின் விண்ணப்பத்தை ஏற்காவிட்டால் அவர் மிகுந்த வருத்தமடைவார். மற்றவரது துக்கத்தை காணச் சகியாத இளகிய மனமுள்ள தாங்கள் தயவுசெய்து இவரது ப்ரார்த்தனையை ஏற்றுக்கொள்வீர்கள் என நினைக்கிறேன்'' என்றார். இப்படி அடிக்கடி கேட்டுக்கொண்டதன் பேரில் வித்யாநிதி மனமுவந்து கதாதரருக்கு தீக்ஷை அளிக்க ஒப்புக் கொண்டார்.

இது நடந்த ஓரிரு தினங்களில் வித்யாநிதி தனியாக ப்ரபுவை சந்திக்க அவர் ஏகாந்தமாக இருந்த நேரத்தில் சென்றார். மஹாப்ரபுவைப் பார்த்த உடனேயே அவரது சரணங்களில் விழுந்து தேம்பித்தேம்பி அழலானார். தனது சரணங்களில் வீழ்ந்த புண்டரீக வித்யாநிதியைக் கண்டு ப்ரபு ப்ரேமையின் உச்ச நிலையை அடைந்து அவரை வாரி எடுத்து இறுகத் தழுவிக்கொண்டார். அவரது கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. ஸர்வ ஶரீரமும் புளகாங்கிதம் அடைந்தது. புண்டரீகனின் வக்ஷஸ்தலத்தில் தனது சிரஸ்ஸை வைத்துக்கொண்டு அழுதுகொண்டு இருந்தார். தனது கண்ணீரால் வித்யாநிதியின் வக்ஷஸ்தலத்தை குளிரப்படுத்தினார். இருவருக்கும் இந்த ப்ரேம ஆலிங்கனத்தில் நேரம் நழுவினதே தெரியவில்லை. மாத்யாந்ஹிக ஸமயத்திற்குப் பிறகுதான் ப்ரபு தன் சுயநினைவை அடைந்தார். இதற்குள் மற்ற பக்தர்களும் கொஞ்சம் கொஞ்சமாக வர ஆரம்பித்தனர். ப்ரபு அனைவருக்கும் புண்டரீக வித்யாநிதியை அறிமுகம் செய்துவைத்தார். பக்தர்கள் வித்யாநிதியைப் பார்த்து ஆனந்தம் அடைந்தனர். உடனே அனைவரும் நாமஸங்கீர்த்தனம் செய்தனர். புண்டரீக வித்யாநிதி மறுபடியும் தன் நினைவிழந்து மூர்ச்சையானார். பக்தர்கள் நாமஸங்கீர்த்தனத்தை நிறுத்திவிட்டு அவருக்கு பல உபசாரங்களைச் செய்து நினைவை எழுப்பினர். வித்யாநிதி ப்ரபுவிடமிருந்து விடைபெற்று தன் இருப்பிடம் திரும்பினார்.

மாலையில் கதாதரர், வித்யாநிதியிடம் மந்த்ரதீக்ஷை பெற இருப்பதைப் பற்றி மஹாப்ரபுவிடம் ப்ரஸ்தாபித்தார். அதற்கு ப்ரபு

படிப்பு, கற்ற கல்வி இவைகள் ஒருவனுக்கு வெளியூரில், (அயலூரில்) உற்ற துணைவன். வீட்டில் மனைவிதான் கணவருக்கு நல்ல சிநேகிதி. வியாதிகாரனுக்கு தகுந்த மருந்துதான் நண்பன். இறந்தவனுக்கு அவன் செய்த தர்மம் தான் நண்பன் - உற்ற துணைவன். ஒருவன் படித்துவிட்டு நல்லவேலையில் நல்ல சம்பளத்தில் எங்காவது சென்று பணம் ஈட்ட வேண்டும் என்று நினைத்தால் தக்க கல்வி அறிவை ஸம்பாதித்துக்கொள்ள வேண்டும்.

विद्या मित्रं प्रवासेषु भार्या मित्रं ग्रहेषु च ।
व्याधितस्यौषधं मित्रं धर्मो मित्रं मृतस्य च ॥

சுகமாக ஒருவன் இருக்க விரும்பினால், அவன் கல்வியை விட்டுவிட வேண்டும். ஆனால் மாணாக்கன் படிக்க விரும்பினாலோ, சுகத்தை விட்டுவிட வேண்டும். இரண்டும் மாணவப் பருவத்தில் முரண்பாடான அம்சங்கள். ''அல்பாஹாரம், ஜீர்ண வஸ்த்ரம் ஏதத் வித்யார்த்தி லக்ஷணம்'' - மிதமான உணவு, துணிமணிகளில் நாட்டமின்மை - இவைகள்தான் மாணவனின் இன்றியமையாத அம்சங்கள்.

सुखार्थी त्यजने विद्यां विद्यार्थी त्यजते सुखं ।
सुखार्थिनः कुनो विद्या कुतो विद्यार्थिनः सुखं ॥

ஆகவே, மாணவனாக இருக்கும்பொழுது, கல்வியிலே கண்ணும் கருத்துமாக இருந்து, சோம்பல் இல்லாமல் மிதமாக உண்டு, மிதமாகத் தூங்கி, விடிகாலையில் விழித்து, கற்றதை மனதில் அர்த்தம் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். இப்படிப் படித்தால் பரீட்சை சமயத்தில் டென்ஷன் ஆக வேண்டிய அவச்யம் ஏற்படாது. கல்வியைப் பற்றி மற்றைய கருத்துக்களை, அடுத்த பகுதியில் பார்க்கலாம்.

ஶ்ரீ ஹரி:

*ஶ்ரீ ப்ரேமிகவரதன் துணை*



# ஶ்ரீ ஜயந்தீ ப்ரஹ்மோத்ஸவப் பத்திரிகை

*வாஸுதேவபரா வேதா வாஸுதேவபரா மகா: ।*
*வாஸுதேவபரா யோகா வாஸுதேவபரா: க்ரியா: ॥*
*வாஸுதேவபரம் ஜ்ஞானம் வாஸுதேவபரம் தப: ।*
*வாஸுதேவபரோ தர்மோ வாஸுதேவபரா கதி: ॥*

இடம் : மதுரபுரி

தேதி : 11-08-2001 முதல்
20-08-2001 வரை

**Note**

மதுரபுரி என்பது ஆஶ்ரமத்தின் பெயர்.
தாம்பரம் to ஶ்ரீ பெரும்புதூர் மார்கத்தில்
மலைப்பட்டு என்ற இடத்தில் இறங்கி வரவேண்டும்.
55S, 55N, 82C மற்றும் பாரதி, வேல்முருகன் Transport.
படப்பை - ஸோமமங்கலம் மார்கத்தில் ஆஶ்ரமம் பஸ் ஸ்டாப்.

16b

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் விஷு ஸூ,

ஆடி மீ, 26 வ (11-8-2001) சனிக்கிழமை,

பரணி நக்ஷத்ரத்துடன் கூடிய சுபயோக

சுபதினத்தில், வரும் ஸ்ரீ க்ருஷ்ண

ஜன்மாஷ்டமியை முன்னிட்டு, மதுரபுரி

பாகவதபவனத்தில் எழுந்தருளியிருக்கும்

**"ஸ்ரீ மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு"**

எட்டாவது வருட ப்ரஹ்மோத்ஸவம்

நடைபெறுவதால், பாகவதோத்தமர்கள்

வந்திருந்து கதாஶ்ரவணம், நாமஸங்கீர்த்தனம்,

உத்ஸவ வைபவம் இவைகளில்

கலந்துகொண்டு

ஸ்ரீபகவத்க்ருபைக்கு பாத்ரமாகும்படி

கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

மதுரபுரி
ஆஷாட ஏகாதஶீ, 1-7-2001

ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்

# நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 11-08-01 | சனி | மாலை - ஹம்ஸவாஹனம்<br>இரவு - நந்தோத்ஸவம் |
| 12-08-01 | ஞாயிறு | மாலை - ஶேஷவாஹனம்<br>(மலைபட்டு புறப்பாடு) |
| 13-08-01 | திங்கள் | மாலை - ஸிம்ஹவாஹனம்<br>(மாஹாண்யம் புறப்பாடு) |
| 14-08-01 | செவ்வாய் | மாலை - புன்னைமர வாஹனம் |
| 15-08-01 | புதன் - ஏகாதஶீ | காலை - திருமஞ்ஜனம்<br>மாலை - கருடவாஹனம் |
| 16-08-01 | வியாழன் - த்வாதஶீ | காலை - கோவிந்த பட்டாபிஷேகம்<br>மாலை - யானை வாஹனம்<br>(மணிமங்கலம் புறப்பாடு) |

| | | |
|---|---|---|
| 17-08-01 | வெள்ளி | மாலை - நிகுஞ்ஜோத்ஸவம்<br>ஸங்கீத கச்சேரி - **by**<br>-ஸ்ரீமதி நித்யஸ்ரீ மஹாதேவன்<br>இரவு - குதிரைவாஹனம் |
| 18-08-01 | சனி | மாலை - ஜானவாஸம் |
| 19-08-01 | ஞாயிறு | காலை - ராதா கல்யாணம் |
| 20-09-01 | திங்கள் | காலை - விடையாற்றி |

---

தினந்தோறும் உத்ஸவத்தில்
காலையில்
ஸ்ரீமத் பாகவத பாராயணமும்,
மாலையில் ப்ரவசனமும்,
இரவில் திவ்யநாமஸங்கீர்த்தனமும்
நடைபெறும்.

**சுபம் !**